பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 29 ஞாயிற்றுக்கிழமை 12.05.2024 கதிர் 186

# தமிழினப்படுகொலையின் 15ஆவது நினைவேந்தல்

## அனைவருக்கும் பொதுக் கட்டமைப்பு அழைப்பு

தமிழினப்படுகொலையின் 15ஆவது நினைவேந்தலுக்கான நாள் அழைப்பை முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு - வடக்குக், கிழக்கு விடுத்துள்ளது.

முள்ளிவாய்க்காலில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில் மே 18 முற்பகல் 10.30 மணிக்கு நினைவேந்தல் நடைபெறவுள்ளது. அதில் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பான விவகாரம் உள்ளுக்குள்ளேயே பல்வேறு குழப்பங்களுடன்தான் நகர்கின்றன என்று கூறப்படுகின்றது. ஏப்ரல் 30 வவுனியாவில் 32 பொது அமைப்புக்களும் தனிபர்கள் 14 பேரும் கூடி பொது வேட்பாளரை நியமிப்பது என்று ஒரு முடிவெடுக்கப்பட்டது. அதன்பின்னர் மே 4 யாழ்ப்பாணத்தில் அதே ஆட்களுக்கும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையே ஒரு கூட்டம் நடந்தது. அதில் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் மாவை சேனாதிராசாவும் கட்சியின் உட்கட்சித் தேர்தலில் சிறீதரனை ஆதரித்த சிலரும் கலந்துகொண்டனர். தமது கட்சியின் முடிவை இரு வாரங்களுக்குள் அறிவிப்பதாக அந்தக் கூட்டத்தில் அவர்கள் கூறியும் இருந்தனர். இதுவெல்லாம் எமது வாசகர்களுக்கும் தெரியும். ஏப்ரல் 30 கூட்டத்தின் தொடர்ச்சியாகத்தான் மே 4 கூட்டம் நடந்தது என்றுதான் ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. ஆனால் அது அப்படியில்லை என்கிறார்கள் இப்போது. ☞ 2

## நாமலைச் சந்தித்தார் அமெரிக்கத் தூதுவர்

நாடாளுமன்ற உறுப்பினரும் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளருமான நாமல் ராஜபக்சவை அமெரிக்கத் தூதர் ஜூலி சங் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்

இலங்கையில் அரசியல் கட்சிகளுக்கிடையிலான எமது சந்திப்பின் ஒரு பகுதியாக நாமல் ராஜபக்சவைச் சந்தித்தோம் என்று அமெரிக்கத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் என்ற புதிய பொறுப்பில் அவரது அரசியல் ஈடுபாடுகள், இளைஞர்களை பாதிக்கும் பிரச்சினைகள் மற்றும் இலங்கை - அமெரிக்காவுக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்தல் தொடர்பான கருத்துக்களை பரிமாறிக்கொண்டோம் என்றும் அவர் தெரிவித்தார்.

## முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகம் தொடக்கம்



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் நேற்றுத் தொடங்கியது. அதனையொட்டி வடக்கு கிழக்குத் தயாகத்தில் பல்வேறு இடங்களிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

போரின் இறுதிக் கட்டத்தில் மிகக் குறுகிய கடற்கரையோர நிலப் பரப்பான முள்ளிவாய்க்காலினுள் சிக்கிக் கொண்ட தமிழர்கள் மீதான இனப்படுகொலை ☞ 2

## சாத்வீக முறைகள் அணுவளவும் பிசகாமல் போராடினால் நீதி கிடைத்ததேயாகவேண்டும்

### முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குறித்த அறிக்கையில் சுமந்திரன் தெரிவிப்பு

எமது போராட்டம் நீண்ட நெடியதானதாக இருந்தாலும், அற வழியில் சாத்வீக முறைகளைக் கைக்கொண்டு அதிலிருந்து அணுவளவும் பிசகாமல் போராடுவோமானால் எமக்கான நீதி கிடைத்தேயாகவேண்டும். அப்படியானதொரு தூய்மையான அறவழிப் போராட்டத்தில் இணைந்துகொள்ளுமாறு அனைவருக்கும் அறைகூவல் விடுக்கின்றேன்.

இவ்வாறு தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார். ☞ 2

## இலங்கையர்கள் போல் வலுவான கலாசாரம் கொண்ட சமூகம் தெற்காசியாவில் இல்லை

### தம்மிக்க பெரேரா தெரிவிப்பு

தெற்காசியாவில் இலங்கையர்கள் போன்ற வலுவான கலாச்சாரம் கொண்ட சமூகம் இல்லை என்று டி.பி. எடியூகேசன் ஸ்தாபகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தம்மிக்க பெரேரா,

பொது இடங்களில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு நிகழும் பாலியல் வன்முறைகளுக்கு எதிரான 'உலகளாவிய வன்கொடுமை எதிர்ப்பு சைகை'3 கைமுத்திரை ☞ 8

## பெண்களை வலுவூட்டும் 2 சட்டங்கள் ஜூனில் நாடாளுமன்றில் நிறைவேறும்

### ஜனாதிபதி அறிவிப்பு

பெண்களை வலுவூட்டும் வகையில் ஆளும் தரப்பு இரண்டு சட்டமூலங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். இந்த இரு சட்டமூலங்களும் வரும் ஜூன் மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பொது இடங்களில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு நிகழும் பாலியல் வன்முறைகளுக்கு எதிரான 'உலகளாவிய வன்கொடுமை எதிர்ப்பு சைகை' 3 கை முத்திரை வெளியிடும் நிகழ்வு நேற்று கொழும்பு தாமரைத்தடாக அரங்கில் டி.பி.எடியூகேசன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு ☞ 8

## இலங்கையில் பொறுப்புக்கூறலிற்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவு

### புதிய தூதராக நியமிக்கப்பட இருப்பவர் உறுதிமொழி

இலங்கையில் பொறுப்புக்கூறல், உண்மை நல்லிணக்கம் நீதி போன்றவற்றிற்கு ஆதரவளிப்பேன் என இலங்கைக்கான அமெரிக்காவின் புதிய தூதுவராக நியமிக்கப்படவுள்ள எலிசபெத் கே கோர்ஸ்ட் தெரிவித்தார்.

அமெரிக்க செனெட்டின் வெளிவிவகார குழுவின் முன்னிலையில் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவ ☞ 8

## தாளையடியில் குடும்பப் பெண் கழுத்து நெரித்துப் படுகொலை

### சந்தேகத்தில் கணவர் கைது

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, உடுத்துறைப் பகுதியில் குடும்பப்பெண்ணொருவர் கழுத்து நெரித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். சந்தேகத்தின் பேரில் அவரது கணவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உடுத்துறை வடக்கு, தாளையடியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான ஜெகசீலன் சங்கீதா (வயது 44) என்பவரே படுகொலை செய்யப்பட்டவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டின் கழிவறைக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த நீர் நிரப்பப்பட்ட கொள்கலனினுள் (பரல்) தலை தாண்டிருந்த நிலையில் அவரது சடலம் வெள்ளிக்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் கண்டுபிடிக்கப்பட்டது என்றும் பொலிஸார் ☞ 8

## வேலைவாய்ப்பு தருவதாகக்கூறி வாக்குத் திரட்டும் நாடு இலங்கை

### வேறு எங்கும் இப்படி இல்லை என்கிறார் அனுர எம்.பி.

வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாகக்கூறி வாக்குத்திரட்டுகின்றனர். இதுபோன்ற நாடு உலகில் வேறொன்றும் இல்லை என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நில அளவையாளர்களின் தேசிய மாநாடு நேற்று கொழும்பில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகின்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசாங்க சேவை ஆட்சியாளர்களின் தேவைக்காக பயன்படுத்தப்படும் நிலைமைகளே காணப்படுகின்றன.துறைமுகத்தில் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுத்தருவதாக கூறி வாக்குத்திரட்டுகின்றனர். இவ்வாறான நாடு உலகில் வேறெங்கும் உள்ளதா?

மோதல்களைநிறுத்த வேண்டு;ம். ஸ்திரமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ☞ 8

## செயற்கை நுண்ணறிவிற்கும் பௌத்தத்திற்கும் தொடர்பு என்ன?

### ஆராய வேண்டும் என்கிறார் ஜனாதிபதி

செயற்கை நுண்ணறிவுக்கும் புத்த மதத்துக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

மொரட்டுவ பௌத்த மன்ற மண்டபத்தில் நேற்று நடைபெற்ற மொரட்டுவ இலங்கை பௌத்த சங்கத்தின் 100ஆவது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றியபோதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ☞ 8

## எந்தவொரு நாட்டுக்கும் அடிபணிய மாட்டேன்

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் சூளுரை

சஜித் பிரேமதாச எந்தவொரு நாட்டுக்கும் அடிபணிய மாட்டார் என்பதை நினைவில் கொள்ளுங்கள் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட விவசாயிகள் மாநாட்டில் நேற்றுக் கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த ஆண்டு இறுதியில் பொதுமக்கள் யுகம் உருவாகும். எம்மைப்பற்றிசிந்தித்து ☞ 8

## இனி இது .....

மே 4 கூட்டத்தைக் கூட்டியது யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டு இயங்கும் காட்சி ஊடகம் ஒன்றினால் அமைக்கப்பட்ட 'மக்கள் மனு' வடக்கு - கிழக்கு சிவில் (குடிமை) அமைப்பு த்தானாம். தவிர வவுனியாவில் கூடிய பொது அமைப்புக்கள் என்று கூறப்படுகின்றவற்றாலோ அங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையிலோ அல்ல என்று சொல்லப்படுகின்றது. மே4 கூட்டத்தில் அரசியல் கட்சிகளுக்களுடன் நடந்த பேச்சில் இரு தரப்பினருக்கும் இடையில் சுமுகமான ஒரு நிலை இருக்கவில்லை என்று தெரிகின்றது. அதாவது, அரசியல் தளத்தில் கட்சிகள் என்ன செய்யவேண்டும் என்று அரசியல் பத்தி எழுத்தாளர்கள் விளக்கப்போக அது அங்கிருந்த அரசியல் தலைவர்கள் பலருக்கும் விசனத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. "எங்களுக்கு அரசியல் வகுப்பெடுக்காதையுங்கோ" என்கிற அளவுக்கு விவகாரங்கள் நகர்ந்திருக்கிறது.

அந்தக் கூட்டத்தில் 'மக்கள் மனு' என்கிற பெயரில் உள்ள அமைப்பு, தான் இதுவரையில் பொது வேட்பாளர் தொடர்பாக 4 கூட்டங்களை நடத்தி அதற்கு ஆதரவு திரட்டும் கருத்துருவாக்கத்தைச் செய்திருப்பதாகவும், இனி அந்தப் பணியில் இருந்து விலகிக்கொண்டு வவுனியாவில் கூடிய பொது அமைப்புக்கள் என்று சொல்லப்படுகின்ற அமைப்புக்களின் திரட்டால் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படும் என்றும் கூறியிருக்கின்றது.

இதற்கிடையில், அந்த வவுனியாக் கூட்டத்தில் பொது வேட்பாளர் தொடர்பில் நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்படும் தீர்மானம் தொடர்பிலேயே சர்ச்சைகள் உருவாகியுள்ளன. அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களில் முக்கியமான ஒருவராகக் காட்டப்பட்டவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் கலாநிதி சிதரம்பரநாதன். ஏப்ரல் 30 கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் அவரும் ஒப்பமிட்டார் என்றுதான் ஊடகங்களுக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால், அந்தக் கூட்டத்தில் சிதம்பரநாதன் தேர்தல் புறக்கணிப்புத் தொடர்பில்தான் கருத்துக்களை முன்வைத்தார் என்றும், கூட்டத்தின் இறுதியில் ஓர் அறிக்கை வெளியிடப்படும் என்று தெரிவித்து அங்கு எந்தவொரு அறிக்கையும் வாசித்துக்காட்டப்படவில்லை என்றும் அத்தகைய அறிக்கை ஒன்றில் தாம் யாரும் கையெழுத்து வைக்கவில்லை என்றும் சிதம்பரநாதன் தரப்பில் கூறப்படுகின்றது. பொது வேட்பாளர் விடயத்தில் அவருக்கு (சிதம்பரநாதன்) உடன்பாடில்லை என்றும் அதனாலேயே யாழ்ப்பாணத்தில் நடந்த கூட்டத்திற்கு அவர் செல்லவில்லை என்றும் அவரது தரப்பினரால் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் சிதம்பரநாதன் எந்தவித தெளிவுபடுத்தல் அறிக்கைகளையும் இதுவரையில் வெளியிடவில்லை, அவருக்கும் பொது வேட்பாளர் விடயத்திற்கும் தொடர்பில்லை, அவர் வவுனியாக் கூட்டத்தில் கலந்துகொண்டார் என்பது உண்மை ஆனால் அந்தத் தீர்மானத்திற்கு உடன்படவில்லை என்று அவரது தரப்பினரே கூறிவருகின்றனர். கலாநிதி சிதம்பரநாதன் இனி இது தொடர்பில் தெளிவுபடுத்தினாலேயே உண்மை வெளிவரும்.

இதற்கிடையில் நேற்று சூம் மூலம் ஒரு கூட்டம் நடந்திருக்கின்றது. வவுனியாவில் கூடியதாகக் கூறப்படும் பொது அமைப்புக்களின் கூட்டத்தின் தொடர்ச்சியாக இந்த சூம் கூட்டம் நடத்தப்பட்டிருக்கின்றது. அந்தக் கூட்டத்தில் பொது வேட்பாளர் தொடர்பில் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்துவது தொடர்பாகவும் அரசியல் கட்சிகளுடன் தமது சார்பில் பேசுவது தொடர்பாகவும் ஆராயப்பட்டிருக்கின்றது. அந்தக் கூட்டத்தில் யார் யாரெல்லாம் கலந்துகொண்டார்கள் என்பதை உடனடியாக அறியமுடியவில்லை. அதை அறியும்போதும் அங்கு என்ன பேசினார்கள் என்னென்ன குழப்பங்கள் இருந்தன என்று அறியும்போதும் தகவல்களைத் தருகின்றேன்.

இதற்கிடையில் பொது வேட்பாளர் தொடர்பில் சம்பந்தர் மீண்டும் எதிரான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார் என்று அறியமுடிந்தது. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பொறுமையாகத்தான் விவரங்களைக்கையாளவேண்டும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். தன்னைச் சந்தித்த தமிழ் அரசுக் கட்சியின் தெரிவு செய்யப்பட்ட தலைவர் சிறீதரனிடமும் அவர் இந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கிறார் என்றும் அறியமுடிந்தது. மேலதிக விவரங்கள் கிடைக்கும்போது அவற்றையும் உங்களோடு பகிர்ந்துகொள்கின்றேன்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தமிழினப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முள்ளிவாய்க்கால் மண்ணில் தமிழினப்படுகொலை உச்சந்தொட்டு இவ்வருடம் 15ஆவது ஆண்டு. ஈழத்தமிழினத்தின் அடக்குமுறைக்கெதிரானவிடுதலைப் போராட்டத்தின் ஆயுதப் போராட்டப் பரிமாணத்தை பல்வேறு சக்திகளின் துணைகொண்டு இலங்கை அரசு மௌனிக்கச்செய்து 15 ஆண்டுகள் நிறைவடைகின்றது.

தமிழ்த் தேசியத்தின் நம்பிக்கையில் உறுதி கொண்டு தமிழர் விடுதலைப்போராட்டத்தின் வடிவங்களை மாற்றி தொடர்ந்தும் விடுதலைக்காக ஈழத்தமிழினம் பயணிக்கின்றது என்பது, விடுதலையின் மீது கொண்ட பேரவாவின் பிரதிபலிப்பாகும்.

ஈழத் தமிழினத்தின் நீதி வேண்டிய பயணமும், தொடர் போராட்ட முன்னெடுப்புகளும் நீதியின் கதவை எப்போதுமே தட்டிக்கொண்டேயிருக்கப்போகிறது.

மனித உரிமைக்காவலர்கள் என்று மார் தட்டிக்கொள்பவர்களின் வெள்ளைச்சாயம் தமிழினப் படுகொலையில் வெளுக்கத்தொடங்கி ,தற்போது காசாவில் அரங்கேற்றப்பட்டுக்கொண்டிருக்கும் பலஸ்தீனப்படுகொலையில் கட்டங்கட்டமாக அப்பட்டமாக தோலுரிக்கப்படுகிறது.

மனித உரிமை சாசனத்தை ஒரு கையிலும், கொலைக்கருவியை இன்னொரு கையிலும் கொண்டு ஜனநாயகம் போதிப்பவர்களின் அபத்தம் பூதாகரமாக வெளிக்கிளம்புகிறது. ஈழத்தமிழினம் நினைவுகளை மட்டும் ஆயுதமாக்கவில்லை.

விடுதலைக் கனவினை நம்பிக்கை இயங்கியலாக்கி இலக்கு நோக்கிப்பயணிக்கின்றது. நீதிக்கான தொடர் தேடலும் ஓர் ஆயுதமே என்பதை ஆர்மேனியா தொடக்கம் பலஸ்தீனம் வரைக்கும் விடுதலைப் போராட்டங்களின் வரலாறு எமக்கு சொல்லித் தருகின்றது.

பேரவலத்தை நினைவுகூருவதற்கு அப்பால், ஈழத் தமிழினம் விடுதலைக்காய்தியாகித்தவர்களின் கனவுகளின் நினைவுகளைச் சுமந்து பயணிக்கின்றது முள்ளிவாய்க்காலில்.

முள்ளிவாய்க்கால் ஒரு பேர வலத்தின் குறியீடு மட்டுமல்ல.அடக்குமுறை எதிர்ப்பின் நம்பிக்கையின் குறியீடு. விடுதலைப்போராட்டத்தை வெற்றி அல்லது தோல்வி என இருமைக்குள் வரையறுத்துவிட முடியாது.

15ஆவது ஆண்டின் நினைவேந்தல் ஒழுங்குமுறைகளை தயார் செய்யும் ஈழத்தமிழினம், முள்ளிவாய்க்கால் தரும் விடுதலை நம்பிகையின் நினைவுகளை மக்கள் மயப்படுத்தப்பட வேண்டிய கால கட்டத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது.

விடுதலை நம்பிக்கையின் நினைவுகளை மக்கள் மயப்படுத்துவதென்பது, ஒருஅமைப்பின் நிகழ்ச்சித்திட்டமல்ல. ஒவ்வொரு ஈழத்தமிழனதும் வரலாற்றுக் கடமையும் உரிமையும் கூடவாகும்.

இதை நினைவில் கொண்டு, அனைவரும் பேதங்களைத் துறந்து, சுயலாப , சுயவிளம்பரப் படுத்தல்களைக் கடந்து எமது பொது நிகழ்ச்சி நிரலில் ஒன்றுபட்டு தமிழர்களாக இந் நினைவேந்தலில் ஒன்றிணையுமாறு அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் அன்று மாலை 6மணிக்கு அனைத்து ஆலயங்களிலும், கோவில்களிலும் மணி ஒலி எழுப்புவதுடன் அன்று இயலுமான வரை முள்ளிவாய்க்கால் கஞ்சியையும் பரிமாறி தமிழின அழிப்பினை நினைவு கூருவோம்.

அத்தோடு உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ இந்த நினைவேந்தல் சம்மந்தமாக நாம் நிதியினை பெற்றுக் கொள்ளவுமில்லை, இனியும் பெற்றுக்கொள்வதுமில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறோம் என்று அந்த அழைப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாத்வீக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முள்ளிவாய்க்கால் படுகொலை வாரத்தையொட்டி அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ள அவர், அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

2009 மே மாதம் நிகழ்ந்த முள்ளிவாய்க்கால் படுகொலைகளை இந்த வாரம் நாம் நினைவுகூருகிறோம். போரின் இறுதிக்கட்டத்திலே எந்தத் திசையிலும் தப்பியோட முடியாமல், தொடர்ச்சியாக அன்பானவர்களை இழந்தவண்ணமாக, வெறுங்கையர்களாக எமது மக்கள் , உணவில்லாமல், கஞ்சி மட்டும் குடித்தபடி, பெரும் நெருக்கடியிலும், துயரத்திலும் கழித்த நாட்கள் இவை.

துப்பாக்கி, வெடிகுண்டு சத்தங்கள் மௌனித்த பின்பு, தாம் அகப்பட்டிருந்த இடத்திலிருந்து மக்கள் வெளியேறியபோது, பலர் அரச படைகளினால் சுட்டுக் கொல்லப்பட்டதும், மற்றவர்கள் பல விதங்களில் துன்புறுத்தப்பட்டதும் அனைவரும் அறிந்த உண்மை. குறித்த வயதெல்லைக்குட்பட்ட ஆண்களும் பெண்களும் அரச படைகளிடம் சரணடைய வேண்டுமென வற்புறுத்தப்பட்டு தங்கள் உறவினர்களால் அப்படியாகக் கையளிக்கப்பட்டவர்கள் இன்றுவரை காணாமலாக்கப்பட்டிருக்கின்றார்கள். எஞ்சியவர்கள் முட்கம்பி வேலிகளுக்குள் கைதிகளைப்போல அடைக்கப்பட்டு, ஒன்றரை வருடத்திற்கு மேல் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள்.

இத்தனை கொடூரங்களும் உலகமே பார்த்திருக்க அரங்கேற்றப்பட்டு 15 வருடங்கள் இன்று நிறைவடைகின்றன. இன்றுவரை இந்த சர்வதேச குற்றங்களுக்காக ஒருவருக்கெதிராகத்தானும் வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை, ஒருவரும் குற்றவாளியாகக் காணப்படவுமில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை 2014ஆம் ஆண்டு ஓஜஎஸ்எல் (OISL) என்ற முழுமையான சர்வதேச விசாரணை ஒன்றை நடாத்தி, அதன் அறிக்கையை 2015 செப்டம்பர் மாதத்தில் வெளியிட்டிருக்கின்றது. அந்த அறிக்கையிலும் அதற்கு முன்னர் ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கு கொடுக்கப்பட்ட 2012 மார்ச் 31 திகதியிட்ட நிபுணர் குழுவின் அறிக்கையிலும் போரின் இறுதிக் கட்டங்களில் பல சர்வதேசக் குற்றங்கள் இழைக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன எனவும், அதற்குப் பொறுப்பானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

2015 ஒக்டோபர் 1 ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் ஸ்ரீலங்கா அரச அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட 30/1 என்ற தீர்மானத்தில் சர்வதேச விசாரணையாளர்கள், சட்டத்தரணிகள், வழக்கு தொடுநர்கள் மற்றும் நீதிபதிகளினுடைய பங்கேற்புடன் நீதிமன்ற பொறிமுறையொன்றை ஏற்படுத்துவதாக உறுதி கூறப்பட்டிருந்த போதிலும், ஸ்ரீலங்கா அரசு பின்னர் அந்த வாக்குறுதியிலிருந்து பின்வாங்கிவிட்டது.

ஆயுதப் போராட்டம் முடிவடைந்த பின்னர் கடந்த 15 ஆண்டு காலத்தில் தமிழர்களின் அரசியல், சமூக, பொருளாதார நிலைப்பாடுகளில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்கள் சம்பந்தமாக சிந்தித்து செயலாற்றுவதற்கான பொருத்தமானதொரு தருணம் இதுவென்று நான் நினைக்கின்றேன்.

எமது அரசியல் விடுதலைக்கென்றே கால் நூற்றாண்டுக்கு கூடுதலாக ஆயுதப்போராட்டமொன்று நிகழ்த்தப்பட்டது. ஆயுத முனையில் அறம்சார்ந்த அரசியல் விடுதலையை பெற முடியாது என்பது எனது தனிப்பட்ட நம்பிக்கையாக இருந்தபோதிலும், தம் மீது மோசமான அடக்குமுறைகளையும் வன்முறையையும் இலங்கை அரசு பிரயோகித்த பின்னணியில் வேறு வழியின்றி தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவதற்கு அன்று எடுத்த தீர்மானத்தை இன்று வேறொரு சூழ்நிலையிலிருந்து நாம் மதிப்பிடவோ, குறை கூறவோ முடியாதென்பதை தொடர்ச்சியாக கூறி வந்துள்ளேன்.

அத்தோடு, அத்தகைய ஆயுத போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எவ்வித சுயநல சிந்தனையும் இன்றி எமக்காக செய்த அர்பணிப்புகளும் உயிர்த் தியாகங்களும் எக்காலத்திலும் எமது சமூகத்தில் மிக உயர்ந்த பங்களிப்பாக கருதப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டை நான் தொடர்ச்சியாக வலியுறுத்தி இருக்கிறேன்.

ஆனால் அத்தகைய தியாகம் மிக்க ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்பு, எத்தனையோ பேரிழப்புகளை சந்தித்த பின்பு, மற்றுமொரு முறை ஆயுதம் ஏந்திப் போராடுவதை இலங்கையில் வாழும் எந்தத் தமிழ் மகளும், தமிழ் மகனும் ஒரு தெரிவாக நினைத்துப் பார்ப்பதே இல்லை.

அப்படியான பின்புலத்தில் கடந்த 15 வருட காலத்தில் எங்களுடைய அரசியல், சமூக, பொருளாதார விடுதலைக்காக நாம் மேற்கொண்ட அணுகுமுறைகள் வெற்றியளித்துள்ளனவா என்ற கேள்வியின் அடிப்படையில் சுய விமர்சனத்தை மேற்கொள்வது அத்தியாவசியமானது என்று கருதுகிறேன்.

ஒரு கணம் எமது அரசியல் உரிமைப் போராட்டத்தை ஒருபுறம் வைத்துவிட்டு இக்காலகட்டத்தில் எமது சமூக மற்றும் பொருளாதார நிலைப்பாடுகளை நோக்குவோமாயின், நாம் பெரும் பின்னடைவுகளைத் தொடர்ச்சியாகச் சந்தித்துக் கொண்டிருக்கிறோம் என்பது புலனாகும். இளையவர்கள் மத்தியிலே பரவலாகி இருக்கின்ற வாள் வெட்டுக்குழுக்கள் போன்ற வன்முறைக் கலாச்சாரமும், போதைவஸ்து பாவனையும் இதற்கான சான்றாகும். ஆனால் துரதிஷ்டவசமாக, இவை எமது இளைஞர், யுவதிகளை வலுவிழக்கச் செய்வதற்கான முயற்சிகளாகும். ஆட்சியாளர்களே இவற்றை ஊக்குவிக்கிறார்கள் என்பதில் உண்மை இருக்கும் போதிலும், இவற்றைக் கட்டுப்படுத்தும் முதலாவது பொறுப்பு எமது அரசியல் மற்றும் சமூக தலைவர்களிடம்தான் இருக்கின்றது.

வன்முறைக்கும் போதைப் பாவனைக்கும் சினிமா போன்ற வெளிசக்திகள் பெரும் செல்வாக்கை செலுத்தினாலும்கூட, அந்த தாக்கங்களை மழுங்கடிக்கின்ற விதமான செயற்பாடொன்றையும் முன்னெடுக்காதது எமது தவறேயாகும். இந்தப் பின்னடைவுகள் தொடருமாக இருந்தால், அரசியல் விடுதலை ஒன்று எமக்கு கிடைத்தாலும்கூட அதைப் பொறுப்போடு நிர்வகிக்கின்ற திறன் அற்றவர்களாக எமது இளைய சமுதாயத்தினர் மாறியிருப்பார்கள்.

எமது இளையவர்கள் கலை, கலாசாரம் மற்றும் விளையாட்டுத் துறைகளில் தங்களது அபரிமிதமான திறனை உள்நாட்டிலும் பிராந்தியத்திலும், சர்வதேச மட்டத்திலும்கூட அண்மைய காலங்களில் வெளிப்படுத்தியிருப்பது எமக்கு பெருமை சேர்க்கும் ஒரு முக்கிய விடயம். இது இளைய சமுதாயத்தின் திறமைகளை மேலும் வளர்த்துக்கொள்வதற்கு நாம் மூலதனங்களை செய்ய வேண்டும் என்பதை அழுத்திச் சொல்கின்றன.

இதைப்போலவே பொருளாதார ரீதியில் மிக மோசமாக நலிவடைந்திருக்கும் எமது மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு புலம்பெயர்ந்திருக்கின்ற எமது உறவுகளின் முயற்சிகளின் பயனாக பல செயற்திட்டங்கள் ஆங்காங்கே செய்யப்பட்டாலும் பெருமளவில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கி எமது இளைஞர் யுவதிகள் வெளிநாடு செல்லாமல் இங்கேயே கண்ணியமாக சுய கௌரவத்தோடு வாழக்கூடிய சூழ்நிலையை நாம் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்பதுதான் உண்மை. கடந்த பொதுத்தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இளைஞர்கள் வாக்களித்த முறை இதனை அம்பலப்படுத்தியது.

மேற்சொன்ன இரண்டு காரணிகளும் எமது அரசியல் உரிமைகளுக்கு அப்பாற்பட்டவை அல்ல. மாறாக எமது அரசியல் உரிமைகளிலிருந்து பிரிக்க முடியாதபடி பின்னிப்பிணைந்தவை. எமது மக்களுக்கான விடுதலை பாதையென்பது இப்படியான முழுமையான கண்ணோட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும். அப்படியானதொரு அணுகுமுறையை கடந்த 15 ஆண்டுகளாக நாம் பின்பற்ற தவறிவிட்டோம் என்பதே கசப்பான உண்மை.

சென்ற நாடாளுமன்ற காலம் 2015 - 2019 மட்டும் இதற்கு சற்று விதிவிலக்கானது. அந்த காலகட்டத்தில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த பெருமளவிலான நிலங்கள் விடுவிக்கப்பட்டதும், பல தசாப்தங்களாக புறக்கணிக்கப்பட்டிருந்த எமது பிரதேசங்களில் அபிவிருத்திக்கும் பொருளாதார மீளெழுச்சிக்குமென முக்கியமான நிதியொதுக்கீடுகள் செய்யப்பட்டதை நாம் மறந்துவிடலாகாது. ஆனால் அதற்குப் பின்னர் நில ஆக்கிரமிப்புக்கள் தொடர்ந்து மிக வேகமாக நடைபெறுவதையும் பல்வேறு அடக்குமுறைகள் எம்மீது பிரயோகிக்கப்படுவதையும் நாம் நன்கு அறிவோம். இவற்றை தடுப்பதென்பது, நாம் ஒரு தேசமாக இத்தீவிலே தொடர்ந்து வாழக்கூடிய எமது இருப்பை தக்கவைக்கின்ற, 'தமிழ்த் தேசியத்தை' பாதுகாக்கின்ற பிரதானமான செயற்பாடாகும். வெற்றுக் கோஷங்களையும், போராட்ட மனநிலையை தூண்டுகின்ற பேச்சுக்களையும் நடைமுறை சாத்தியமற்ற தீர்மானங்களை நிறைவேற்றுவதன் மூலமும் மட்டும் எமது மக்களுக்கான விடுதலைப் பயணத்தை ஒரு அங்குலம்கூட முன்நோக்கி நகர்த்த முடியாது. நாம் ஒரு தனி தேசமென்பதை உரக்கச் சொல்லுகிற அதேவேளையில் ஒரு தேசமாக வாழ்வதற்கு வேண்டிய அணுகுமுறைகளை நாம் கைவிடக்கூடாது.

தந்தை செல்வாவின் அடிச்சுவட்டில் பயணிக்கும் நாங்கள் வன்முறையையோ அதன் வெவ்வேறு பிரதிபலிப்புக்களையோ முற்றாக தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். எமது இளைஞர் யுவதிகளினதும், போரிலே மடிந்தவர்களினதும் உயிர்த் தியாகங்கள் வீணாகப் போகாதிருக்க வேண்டுமேயானால் வன்முறைக்கு தூண்டாத எமது அணுகுமுறை தொடர்பாக எமது சிந்தனையிலும் பேச்சிலும் தெளிவாக இருத்தல் வேண்டும்.

1957ஆம் ஆண்டு வன்முறையில் ஈடுபடத்தொடங்கியிருந்த இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியினருக்கு தந்தை செல்வா கூறிய எச்சரிக்கை:'தமிழ் மக்களுக்கு நல்லது கொண்டுவரப் புறப்பட்ட நாங்கள், நாசம் கொண்டுவந்த கதையாக மாறிவிடும்' என்பது இன்றைய சூழ்நிலைக்கும் சாலப்பொருந்தும்.

எமது அரசியல் நிலைப்பாட்டில் உறுதியாக நிலைத்திருந்து எமது தன்மானத்திற்கும் சுய கௌரவத்திற்கும் ஏற்றவிதமான ஆட்சிமாற்றத்திற்கு சாத்வீக வழியில் போராடுகின்ற அதேவேளையில், தேர்தல் நேரங்களிலும் மற்ற

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

## அரசியல் ஆதாயம் தேடும் தரப்புக்கள்

# தமிழர்களை இன்னுமொருமுறை பலிக்கடாவாக்க முனைகிறார்கள்

## கவலைப்படுகிறார் அமைச்சர் டக்ளஸ்

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அவலங்களையும் அரசியல் கோஷங்களாகப் பயன்படுத்தி குறுகிய அரசியல் ஆதாயம் தேடும் தரப்புக்கள், தமது நலன்களுக்காக தமிழ் மக்களை இன்னுமொருமுறை பலிக்கடாவாக்க முனைகிறார்கள்.

அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் வலிகாமம் மேற்கு, வலிகாமம் கிழக்கு, வலிகாமம் வடக்கு. வலிகாமம் தெற்கு மற்றும் வலிகாமம் தென்மேற்கு ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய கட்சியின் பொறுப்பாளர்கள், வட்டாரச் செயலாளர்கள், வட்டார நிர்வாக உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள், முக்கியஸ்தர்களுடனான சந்திப்பு நேற்று சுன்னாகத்திலுள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

1987களின் பிற்பகுதியில் ஆயுதப் போராட்டம் எமது மக்களின் அரசியல் உரிமைகளையும் அபிலாசைகளையும் வென்றெடுப்பதற்கு சாத்தியமற்றதென முடிவெடுத்து நாம் அரசியல் ஜனநாயக நீரோட்டத்தில் காலடி வைத்தபோது சிலர் எம்மை கேலி செய்து எள்ளி நகையாடியிருந்தனர். ஆனாலும் நாம் அதற்கு செவி சாய்த்திருக்கவில்லை.

இந்த ஜனநாயக வழிமுறையின் ஊடாக 1994களில் நாம் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு 9 நாடாளுமன்ற உறுப்பினர்களாக அதாவது யாழ், கிளிநொச்சி தேர்தல் மாவட்டங்களின் 9 மக்கள் பிரதிநிதிகளாக நாடாளுமன்றம் சென்றிருந்தபோது அவ்வாறு ஏளனம் செய்தவர்கள் கூனிக் குறிகிப்போயினர்.

இவ்வாறாக சாத்தியமான வழிமுறையூடாக நாம் முன்னெடுத்த பொறிமுறையின் வெற்றியால் தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கில் எம்மை நோக்கி அணிதிரளத் தொடங்கியிருந்தனர்.

இதை சற்றும் எதிர்பார்த்திராத பிரபாகரன் எமது அரசியல் வளர்ச்சியைக் கண்டு அச்சமுற்று தன்னால் அச்சுறுத்தலுக்குள்ளாகி ஒளிந்திருந்த தமிழ்த் தரப்பினரை அழைத்து தமது அரசியல் நகர்வுகளை முன்னெடுக்கும் வகையிலான கட்டமைப்பாகவே தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்தக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டதும் எம்மை அரசியல் ரீதியில் வெற்றிகொள்ள முடியாதென தெரிந்திருந்த நிலையில் எம் மீது அதிகளவான சேறு பூசல்களையும் அவமானங்களையும் பொய்யான குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்து மக்களிடையே பரப்புரையைத் தீவிரமாக முன்னெடுத்து தமது தேர்தல் வெற்றிகளை உறுதி செய்து கொண்டிருந்தனர்.

அனால் 'உண்மை வெகுநாள் உறங்காது' என்பது போன்று 2009இல் புலிகள் தலைமை அழிக்கப்பட்ட பின்னர் அந்த கூட்டமைப்பு தமது சுயரூபங்களை காட்டத் தொடங்கியுள்ளது மட்டுமல்லாது அதன் உண்மை முகமும் மக்களிடையே வெளிப்படத் தொடங்கியது. புலிகளால் கட்டப்பட்ட கூட்டமைப்பு என்ற அந்த உருழைக்கிழங்கு மூடை இன்று கட்டவிழ்ந்துவிட்டதுடன் திக்குத்திசை தெரியாது உருண்டு ஓடிக்கொண்டிருக்கின்றது. இவ்வாறானவர்களால் ஒருபோதும் தமிழ் மக்களுக்கு எதுவித விமோசனங்களும் கிடைக்கப்போவதில்லை.

அத்துடன் போரால் நொந்துபோயிருந்த தமிழ் மக்களை தமது சுயநலங்களுக்காக மீண்டும் பகடைக்காய்களாகப் பயன்படுத்தத் தொடங்கினர் கூட்டமைப்பினர். இதன் காரணமாக மீண்டும் மக்கள் அவலங்களைச் சந்திக்க நேரிட்டது. ஆனால் ஈழ மக்கள் ஜநயாககக் கட்சியாகிய என்றும் எமது கொள்கை நிலைப்பாட்டில் இருந்து மாறியது கிடையாது. அதனால்தான் ஈ.பி.டி.பி. ஆகிய நாங்கள், எமது மக்களுக்கு சரியான வழியை காட்டுகின்ற தனித்துவமான தரப்பாக இருந்துவருகின்றது

எமது கொள்கைகள்தான் தமிழ் மக்களின் எதிர்காலத்தை வெற்றிகொள்ளும் சக்தியாகவும் உள்ளது. மக்கள் எதிர்கொள்ளுகின்ற அன்றாடப் பிரச்சினைகள் முதல் அபிவிருத்தி உள்ளடங்கலான அரசியல் தீர்வு வரையிலான மூன்று 'அ' க்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் தீர்வுகளை முன்வைக்க முடியும் என்று நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

அதுமட்டுமல்லாது கடந்த பல வருடங்களாக பல்வேறு விடயங்களில் எமது முன்னகர்வுகள் நிரூபிக்கப்பட்டு இருக்கின்றன. அதற்கு நாம் கட்டி வளர்த்துள்ள தேசிய நல்லிணக்கமும் கணிசமான பங்களிப்பைச் செய்திருக்கிறது.

இதேநேரம் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அவலங்களையும் அரசியல் கோஷங்களாகப் பயன்படுத்தி குறுகிய அரசியல் ஆதாயம் தேடும் தரப்புக்கள், தமது நலன்களுக்காக தமிழ் மக்களை இன்னுமொருமுறை பலிக்கடாவாக்க முனைகிறார்கள்.

இவ்வாறான அறிவிலித்தனமான முயற்சிகள் கடந்த காலங்களில் ஆயுதப் போராட்ட குழுக்களினாலும் மிதவாத தமிழ் தலைமைகளினாலும் பலமுறை முன்னெடுக்கப்பட்டன. ஆனால் அவற்றினால் எமது மக்களுக்கு எந்தவித நன்மைகளும் கிடைக்கவில்லை. மீளமுடியாத பின்னடைவுகளையே ஏற்படுத்தியிருந்தன.

அந்தவகைளயில் எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளாக இருந்தாலும் சரி, அரசியல் தீர்வுப் பிரச்சினையாக இருந்தாலும் சரி. தற்போது கிடைக்கவுள்ள இந்த காலகட்டத்ததை நாம் தவற விடுவோமானால், மீளவும் இத்தகையதொரு பொன்னான காலத்தை நினைத்துப் பார்க்க இயலாது என்றே கருதுகிறேன் - என்றார்.

## உணவகம், சிகை அலங்கார நிலையம் வவுனியா சிறையினுள் திறந்து வைப்பு



வவுனியா சிறைச்சாலையில் உணவகம், சிகையலங்கார நிலையம் என்பன திறந்து வைக்கப்பட்டுள்ளன. அங்கு புதிய விடுதி அமைப்பதற்கான அடிக்கல்லும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தால் நடப்பட்டது.

வவுனியா ஏ- 9 வீதியோரமாக சிறைச்சாலையுடன் இணைந்த வளாகத்தில் நேற்று இந்த நிகழ்வு இடம்பெற்றது.



வவுனியாசிறைச்சாலையில்நீண்டகாலமாக தண்டனை பெற்று தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை கொண்டு உணவகம் மற்றும் சிகையலங்கார நிலையம் என்பன நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இவற்றை அந்தக் கைதிகளே நடத்தவுள்ளனர். அவர்கள் சிறையில் உள்ள காலத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கும், அவர்களது மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் இதன்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலை நிர்வாகம் தெரிவிக்கின்றது.

புதிய உணவகம் மற்றும் சிகை அலங்கரிப்பு நிலையம் என்பவற்றை சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துசார உப்புல் தெனிய திறைந்து வைத்தார். அத்துடன், சிறை வளாகத்திற்குள் புதிய விடுதி ஒன்றை நிர்மாணிப்பதற்கான அடிக்கல்லையும் நட்டுவைத்தார்.

வவுனியா சிறைச்சாலை அத்தியட்சகர் கே.ஏ.எஸ்.அபயரட்ண தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் இராணுவத்தின் வன்னி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தினேஸ் நாணயக்கார, சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பொறுப்பதிகாரி ஏ.டீ.புத்திக்க பெரேரா, பௌத்த மதகுருமார், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள், சிறைச்சாலை நலன் பேணும் அமைப்பினர், சிறைக் கைதிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

(100)

## ரவி சங்கர் குருஜியுடன் அமைச்சர் ஜீவன் சந்திப்பு



வாழும் கலை அமைப்பின் நிறுவுனர் சிறீ ரவி சங்கர் குருஜியை நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்புவசதிகள் அபிவிருத்தி அமைச்சருர் ஜீவன் தொண்டமான் நேற்றுச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

மே 18 முதல் 20 ஆம் திகதிவரை இலங்கையில் நடக்கவிருக்கும் சீதை அம்மன் ஆலய குடமுழுக்கு விழாவிற்காக நுவரெலியாவிற்கு வரவுள்ள ரவி சங்கர் குருஜியை அவரது பெங்களூர் ஆச்சிரமத்தில் சந்தித்த அமைச்சர் அவருடன் பேச்சு நடத்தினார்.

அமைச்சரின் சந்திப்புக் குறித்து அவரது அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையின் தற்போதைய நிலவரம், மலையக பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படும் நகர்வுகள் பற்றி குருஜிக்கு அமைச்சர் தெளிவுபடுத்தினார். அதேபோல பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமையை பெற்றுக்கொடுப் பதற்கான ஏற்பாடுகள் பற்றியும் விவரித்துள்ளார். மலையக சமூகமாற்றத்தில் இது முக்கிய திருப்பமாக அமையுமென அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வாழும் கலை நிறுவனத்தின் கீழ், பிரஜா சக்தி, தொண்டமான் அறக்கட்டளை போன்றவற்றின் ஊடாக எமது மக்களுக்கு தொழில் பயிற்சி, தொழில் மேம்பாடு மற்றும் புத்தாக்க வாய்ப்புகள் பற்றி ஆராயுமாறு இதன்போது அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேபோல நீர்வளத்துறை பற்றியும் இருவருக்கும் இடையில் கருத்தாடல் இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பின்போது இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையக சமூகத்தைச் சேர்ந்த செல்லையா கோபாலன் என்ற கலைஞர் வரைந்த ஓவியத்தை குருதேவிடம் அமைச்சர் நினைவு பரிசாக வழங்கினார் - என்றுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அநியாய இறப்புக்களைத் தடுப்போம்

**தாங்க முடியாத வெப்பத்தினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. அதிலும் யாழ்ப்பாணத்தில்தான் அதிக உயிரிழப்புக்கள் நிகழ்ந்திருக்கின்றன.**

**நிலவும் கடுமையான வெப்பம் காரணமாக நேற்று வெள்ளிக்கிழமையும் ஒருவர் உயிரிழந்துள்ளார். அல்வாய் கிழக்கு ஆண்டவர் தோட்டம் பகுதியை சேர்ந்த 68 வயதுடைய வல்லிபுரம் கோபாலசிங்கம் என்பவரே உயிரிழந்துள்ளார்.**

**வீட்டில் மயக்கமுற்ற அவரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்த்திருக்கிறார்கள். எனினும் தாங்க முடியாத வெப்பம் காரணமாக அவர் உயிரிழந்துவிட்டார் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. சட்டவைத்தியஅதிகாரிஅவரது இறப்புகடுமையானவெப்ப தாக்கத்தால் ஏற்பட்டது என்று அறிக்கையிட்டுள்ளார்.**

**வியாழக்கிழமையும் ஒருவர் உயிரிழந்திருந்தார். வெயிலில் மூன்று மணி நேரத்திற்கும் மேல் விழுந்து கிடந்த நிலையில் அவர் உயிரிழந்திருந்தார். அவரது இறப்புக்கும் அதிகரித்த வெப்பமே காரணமாகியிருந்தது. அண்மையநாட்களில்யாழ்.போதனாவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஐவர் 'ஹீட் ஸ்ரோக்' எனப்படும் வெப்ப பக்கவாதத்தால் உயிரிழந்தார் என போதனா வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் ரி.பேரானந்தராஜா ஊடக சந்திப்பில் தெரிவித்து இருந்தார்.**

**இப்படி இதுவரையில் யாழ்ப்பாணத்தில் மட்டும் 7 பேர் அதிகரித்த வெப்பத்தால் உயிரிழந்துள்ளனர். இவர்கள் தவிர மேலும் 3 பேர் வரையிலானோர் நாட்டின் வேறு இடங்களிலும் கடும் வெப்பத்தால் உயிரிழந்திருக்கின்றார்கள்என்றுதெரிவிக்கப்படுகின்றது.**

**இதுவரை இல்லாத அளவிற்கு அதிகரித்திருக்கும் வெப்பத்தைஎதிர்கொள்வதுஎப்படிஎன்கிறவிழிப்புணர்வும் தயார்ப்படுத்தலும் இல்லாத காரணத்தாலேயே இத்தனை உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன.**

**வெயிலின் தாக்கத்தைக் குறைத்துக்கொள்ள, சில வாழ்வியல் நடைமுறைகளை மக்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறார்கள் துறைசார்ந்தவர்கள். முந்தைய காலங்களில் வெளியே சென்றால் தலைப்பாகை அணியும் வழக்கம் இருந்தது. இது வெயில் நேரடியாக உச்சந்தலையில் படாமல் இருப்பதற்காக செய்யப்பட்ட நடைமுறை. எனவே நாமும் வெயில் நேரங்களில் வெளியே செல்லும்போது நேரடியாக தலையில் வெயில் படுவதைத் தவிர்க்க, தொப்பி போன்ற எதையாவது அணியலாம். இதுதவிர, அதிகமாக வெயில் அடிக்கும் மதிய நேரங்களில் அவசியமற்று வெளியே சுற்றுவதைத் தவிர்க்க வேண்டும். உடலில் எப்போதும் போதுமான நீர்ச்சத்தைத் தக்க வைத்துக் கொள்வதை உறுதி செய்ய வேண்டும்.**

**ஒருநாளைக்கு மூன்று முதல், நான்கு லிட்டர் தண்ணீர் வரை குடிக்கலாம். வீடுகளில் மண்பானை வைத்து அதில் வெட்டிவேர் இட்டு அந்தத் தண்ணீரை வைத்துப் பருகுவது உடலுக்கு நல்ல குளிர்ச்சியைத் தரும். இயற்கையான பழச்சாறுகள், பதநீர், இளநீர் ஆகியவற்றையும் பருகலாம். சிறுநீரக பாதிப்பு இருப்பவர்கள் இளநீர் மற்றும் பதநீர் குடிப்பதைத் தவிர்க்கலாம்.**

**தாகத்தைத் தணிப்பதற்கு என ஏரியேட்டு பானங்கள் (Aerated drinks) பருகுவதைத் தவிர்க்க வேண்டும். வெள்ளரிக்காய், சுரைக்காய், வெள்ளை பூசணி போன்ற அதிக நீர்ச்சத்து மிக்க காய்கறிகளை உட்கொள்ள வேண்டும்.**

**இதுதவிரவெப்பத்திலிருந்துபாதுகாத்துக்கொள்வதற்கு மருத்துவர்களும் துறைசார் திணைக்களங்களும் வழங்கும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி அநியாயமாக உயிர்கள் பறிபோவதைத் தடுப்போம்.**

# உலகின் மனசாட்சியான மாணவர் எழுச்சி

### ராஜன் குறை கிருஷ்ணன்

வரலாறு காணாத அசாதாரண சூழ்நிலை அமெரிக்காவிலும், மேற்குலக நாடுகளிலும் உருவாகிவருகின்றது. காஸாவில் இஸ்ரேல் நடத்தும் இனப்படுகொலைக்கு எதிராக பல்வேறு முக்கிய பல்கலைக்கழகங்களிலும் மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளார்கள். பாலஸ்தீனிய விடுதலைக்கான கோஷம் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளது. உலக நாடுகளின் அரசுகளோ, அரசியல் கட்சிகளோ, பிற இயக்கங்களோ எதுவும் செய்ய இயலாதபோது உலகின் மனசாட்சியாக மாணவர் சமூகம் கிளர்ந்து எழுந்துள்ளது. அறுபதுகளில் வியட்நாம் போருக்கு எதிராக உருவான மாணவர் கிளர்ச்சி அலைகளை நினைவூட்டுவதுபோல கிளர்ச்சி ஆனால், மாணவர் கிளர்ச்சி ஐரோப்பிய நாடுகளிலும், ஆஸ்திரேலியாவிலும்கூட பரவத் தொடங்கியுள்ளது.

### பிரச்சினை என்ன?

ஒரு தீவிரவாதிகள் குழு ஒடுக்கப்பட்ட ஓர் இனத்தின் விடுதலைக்காக, அந்த இனத்தின் பிரச்சினைகளுக்கான அரசியல் தீர்வு எட்டப்படாத நிலையில், கொடூரமான ஒரு வன்முறைத் தாக்குதலை நடத்துகிறது. அது நிச்சயம் கடும் கண்டனத்திற்குரிய தவறுதான். ஆனால், அந்தத் தாக்குதலுக்குப் பதிலடியாக, அந்த குழுவைக் கைப்பற்ற, வலுவிழக்கச் செய்ய ஒட்டுமொத்தமாக அந்த இன மக்களை மானாவாரியாகத் தாக்கலாமா, சாதாரண குடிமக்களையெல்லாம்




பரவத் தொடங்கியுள்ளது.

நியூயார்க்கிலுள்ளகொலம்பியாபல்கலைக்கழகம் வியட்நாம் போருக்கு எதிரான கிளர்ச்சிகளை நடத்தியதற்காக புகழ்பெற்றது. நான் அங்கே பயின்ற காலத்திலும் பாலஸ்தீனிய விடுதலைக்காக, ஈராக் போருக்குஎதிராகப்பலகூட்டங்கள், போராட்டங்களில் கலந்துகொண்டுள்ளேன். செல்வாக்கான யூத சிந்தனைக் குழுக்கள் 'சீரழியும் கொலம்பியா' (ளீலியிற்துணுஷ்ழி ஷீஜணுளஉலிதுஷ்ஜஆ) என்று ஒரு ஆவணப்படமே எடுத்து குற்றஞ்சாட்டும் வரை சென்றன.

இப்போது கொலம்பியா நிர்வாகம் பொலிஸாரைக் கூப்பிட்டு முகாமிட்டுள்ள மாணவர்களை வளாகத்திலிருந்து கைதுசெய்து அகற்றும்படிச் செய்துள்ளது. பல்வேறு முன்னணிப் பல்கலை கழகங்களிலும் மாணவர்கள், ஆசிரியர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். ஆனாலும் போராட்டம் தொடர்ந்து பரவுகிறது. பல்கலைக்கழக வளாகத்தினுள் மாணவர்கள் முகாமிட்டுத் தங்குவது, வகுப்புகளைப் புறக்கணிப்பது, கட்டடங்களை ஆக்கிரமிப்பது, ஊர்வலமாகச் செல்வது, முழக்கமிடுவது போன்றவை போராட்ட வடிவங்கள்.

சில பல்கலைக்கழகங்கள் பேச்சுக்கு இணங்கியுள்ளன. சில அடக்குமுறையைக் கையாள்கின்றன. அமெரிக்க அரசோ இஸ்ரேல் அரசை விமர்சிப்பது என்பதே 'யூத வெறுப்பு'

கொன்று குவிக்கலாமா என்பதுதான் இன்று இஸ்ரேல் - காஸா விவகாரத்தில் உலகம் எதிர்கொள்ளும் மிகப் பெரிய கேள்வி. அவ்வாறு ஓர் இன மக்கள் அனைவரையும் தாக்கி அழிப்பது இனப்படுகொலை, 'ஜெனோசைட்' (genocide) என்று அழைக்கப்படுகிறது.

காஸா மத்திய தரைக் கடலை மேற்கு எல்லையாகக் கொண்ட 41 கிலோமீற்றர் நீளமும், 6 முதல் 12 கிலோ மீற்றர் அகலமும், 365 சதுர கிலோமீற்றர் பரப்பளவும் கொண்ட சிறிய நிலப்பகுதி. இந்த நிலத்தில் இருபது லட்சம் பாலஸ்தீனியர்கள் வசிக்கிறார்கள். இவர்கள் எல்லாம் 1948ஆம் ஆண்டு இஸ்ரேல் என்ற யூதர்களுக்கான நாடு உருவானபிறகு நடந்த போரில், அங்கிருந்து வெளியேறி இந்த நிலப்பகுதியில் குடியேறியவர்கள்.

இஸ்ரேல் இருபதாயிரம் சதுர கிலோமீற்றர் கொண்ட, ஒரு கோடி மக்கள் வசிக்கும் நாடு. இங்கு யூதர்களே பெரும்பான்மை, அவர்களே முதன்மைக் குடிமக்கள். இஸ்ரேலுக்கு மேற்கே வெஸ்ட் பாங்க் என்று அழைக்கப்படும் 5,640 சதுர கிலோமீற்றர் கொண்ட பரப்பில் முப்பது இலட்சம் பாலஸ்தீனியர்கள் வசிக்கிறார்கள். காஸாவிலிருந்து வெஸ்ட் பாங்க் செல்ல இஸ்ரேல் வழியாகத்தான் செல்லவேண்டும். பாலஸ்தீனிய பகுதிகள் இஸ்ரேலியப் படையினரின் கட்டுப்பாட்டிலும், மேற்பார்வையிலும்தான் உள்ளன.

இஸ்ரேல் உருவானதிலிருந்து எழுபத்தைந்து




(ழிஜமிஷ்விளதுஷ்மிஷ்விது) என்ற வகைப்பாட்டில் வரும் எனச் சட்டத் திருத்தத்தைச் செய்கின்றது.

ஆண்டுகளாகத் பாலஸ்தீனியர்கள் தாங்கள்

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

காலைக்கதிர் Kalaikkathir

# உலகின் மனசாட்சியான மாணவர் எழுச்சி




வாழும் பகுதி தனி நாடாக அங்கீகரிக்கபட வேண்டும் என்று கோரிவருகிறார்கள். விடுதலைக் கோரிக்கைக்கு அரசியல் தீர்வு காணப்படாததால் மீண்டும், மீண்டும் வன்முறை இயக்கங்கள் தலையெடுக்கின்றன. இஸ்ரேல் படைகள் அந்த இயக்கங்களை அழிக்கும் பொருட்டு ஒட்டுமொத்த பாலஸ்தீனிய மக்களையும் ஒடுக்கிவருகினறன. சாதாரண குடிமக்கள்மீதுவன்முறையைகட்டவிழ்த்துவிட்டுவருகின்றன.

கடந்த இருபதாண்டுகளாக காஸா பகுதியில் ஹமாஸ் என்ற தீவிரவாத இயக்கம் செயல்பட்டுவருகிறது. அந்தப் பகுதி 2007ஆம் ஆண்டிலிருந்து அதன் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. இஸ்ரேலோ ஒட்டுமொத்த காஸாவையும் திறந்தவெளிச் சிறைச்சாலை போல தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. இஸ்ரேலின் அனுமதி இல்லாமல் எந்த இறக்குமதி, ஏற்றுமதியும் செய்ய முடியாது. எத்தனையோ பேச்சு நடந்தும் பாலஸீதீனியர்களின் அரசியல் சுதந்திரம் அல்லது தன்னாட்சி என்பது சாத்தியமாகவில்லை.

இஸ்ரேல் ஆதரவு யூதர்கள் சமூகம் அமெரிக்க அரசியலில் பெரும் செல்வாக்குச் செலுத்திவருகிறது. தொடக்கம் முதலே அமெரிக்காவும், பிற ஐரோப்பிய நாடுகளும் இஸ்ரேலுக்கு முழுமையான ஆதரவு அளித்து வருகின்றன. ஹிட்லரின் நாஜி ஜெர்மனியின் யூத இன அழிப்பின் பின்னணியில் இஸ்ரேல் உருவானதால் மேற்கத்திய நாடுகளின் மேலதிக ஆதரவு இஸ்ரேலுக்குக் கிடைத்துவருகிறது.

தொடக்கத்தில் பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவாக இருந்த அரபு நாடுகளெல்லாம் காலப்போக்கில் அந்தப் பிரச்சினையிலிருந்து விலகிக்கொண்டுவிட்டன. இப்போது ஈரானும், அதன் பின்னால் உள்ள சீனாவும் ஹமாஸுக்கு ஆதரவாக உள்ளன என்றாலும் களத்தில் பாலஸ்தீனிய குடிமக்களைக் காப்பாற்ற அந்த நாடுகளால் எதுவும் செய்ய முடியாது.

## இன்றைய காஸா இனப்படுகொலை

2023ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஹமாஸ் இயக்கம் இஸ்ரேலினுள் புகுந்து தீவிரவாதத் தாக்குதலை நிகழ்த்தியது. ஆயிரம் பேர் வரை இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டார்கள். இருநூற்றைம்பது பேர் வரை ஹமாஸால் கைதுசெய்யப்பட்டு கடத்திவரப்பட்டார்கள். இது காஸா மீதான இஸ்ரேலின்தாக்குதலைதொடங்கிவைத்தது.

வடக்கு காஸாவிலிருந்து பொதுமக்களையெல்லாம் தெற்கே குடிபெயர்ந்து செல்லச் சொன்னது இஸ்ரேல். வடக்கில் நுழைந்து மானாவாரியாகத்தாக்கியது. மக்கள் உணவு, மருத்துவ வசதி கிடைக்காமல் பெரும் துன்பத்திற்கு ஆளானார்கள். குழந்தைகள், பெண்கள், ஆண்கள் என முப்பதாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இஸ்ரேல் படையினரால் கொல்லப்பட்டுள்ளார்கள்.

ஹமாஸ் போன்ற தீவிரவாத, ஆயுதம் தாங்கிய குழுவை மக்களிலிருந்து தனிமைப்படுத்தித் தாக்கி அழிக்க முடியாது. அதற்காக ஒட்டுமொத்த மக்களையும் கொன்று குவிப்பதும் சாத்தியமில்லை. பேச்சுக்களைத் தொடக்குவதும், அரசியல் தீர்வினைதுரிதப்படுத்துவதும்தான்வன்முறை சுழற்சியினை நிறுத்துவதற்கான ஒரே வழி.

உலக நாடுகளால் கடந்த எழுபதாண்டுகளில் இஸ்ரேலை பாலஸ்தீனிய விடுதலை, தன்னாட்சி போன்றவற்றை ஏற்றுக்கொள்ளச் செய்ய முடியவில்லை. தன்னுடைய பாதுகாப்பு குறித்த பேரச்சத்தால் முடிவற்ற வன்முறையையே இஸ்ரேல் வளர்த்துவருகிறது. அமெரிக்காவில் உள்ள சனாதன யூதர்களே (Orthodox Jews) இஸ்ரேல் அரசின் ஆக்கிரமிப்பு மனப்பான்மையை ஆதரிப்பதில்லை.

உலக நாடுகள் ஒருங்கிணைந்து, ஐ.நா மூலமாக, ஹமாஸ் - இஸ்ரேல் போர் நிறுத்தத்திற்கு வகை செய்வதுடன், ஐம்பது லட்சம் பாலஸ்தீனியர்களும் ஒன்றிணைந்த தனிச் சுதந்திர நாடாக வாழ்வதற்கு வகை செய்வதுதான் அறம் சார்ந்த தீர்வாக இருக்க முடியும். மாணவர் கிளர்ச்சிகள் உலகை அந்தத் தீர்வை நோக்கிச் செலுத்துமா என்று தெரியாது. ஆனால், இன்றளவிலேயே மானுடத்தின் மனசாட்சி செத்துவிடவில்லை என்பதை மாணவ சமூகம், கல்விப்புலச் சமூகம் நிரூபித்திருப்பதே மிகப் பெரிய வெற்றி என்றுதான் கூற வேண்டும்.

(நன்றி: அருஞ்சொல்)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நிதி ஒதுக்கீடு தொடர்பான ஆவணங்கள் கையளிப்பு

(நூருல் ஹூதா உமர் )

அட்டாளைச்சேனை பிரதேச சபை மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச செயலக நிர்வாகத்தின் கீழுள்ள ஒலுவில் ஜும்மா பெரிய பள்ளிவாசலுக்கும் கல்முனை அல்-ஹம்றா மகா வித்தியாலயத்துக்கும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் சார்பில் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கியுள்ளார். அதற்கான ஆவணங்கள் நேற்று நிர்வாகத்தினரிடம் கையளிக்கப் பட்டது.

ஒலுவில் ஜூம்மா பள்ளிவாசல் கட்டட நிர்மாண பணிகளுக்கென பள்ளிவாசல் தலைவர் பொறியியலாளர் ஏ.எம்.ராபி, செயலாளர் எம்.பி.எம்.ஹூசைன் ஆகியோர் அடங்கலாக பள்ளிவாசல் நிர்வாகத்தினரை சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ், அவர்களிடம் நிதி ஒதுக்கீட்டுக்கான ஆவணத்தைக் கையளித்தார். அதுபோலவே ஒலுவில் மக்களின் பிரச்சினைகள், குறைநிறைகளை ஆராய்ந்ததுடன் அல் ஹம்றா மகா வித்தியாலயத்திற்கான நிதி ஒதுக்கீட்டு ஆவணங்களை பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுகுழுவினர் முன்னிலையில் அதிபர் யூ.கே. அப்துல் ரஹீமிடம் கையளித்தார்.

இந்தச்சந்திப்பில் ஒலுவில் ஜூம்மா பெரிய பள்ளிவாசல் உப தலைவர் எம். நஷீர், நம்பிக்கையாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினரின் ஆலோசகர்களான எம்.ஜே.எம். அன்வர் நௌஷாத், ஏ. கலீலுர் ரஹ்மான், மக்கள் தொடர்பாடல் செயலாளர் யூ.எல்.என். ஹூதா உமர், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் பீ.ரீ. ஜமால், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்கள், பொது அமைப்புக்களின் பிரதானிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# மகாவலியின் இருபுறமும் மூங்கில்கள் நடும் திட்டம்

## மண்ணரிப்பைத் தடுப்பதற்காக



(அஸ்ஹர் இப்றாஹிம்)

பேரதெனிய பல்கலைக்கழகத்தின் பிளாஸ்டிக் அற்ற சமூகம் , இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் இலங்கை வங்கியின் பேரதெனிய கிளை என்பவற்றுடன் இணைந்து மகாவலி கங்கையின் இரு புறமும் மண் அரிப்பை தடுப்பதற்காக மூங்கில் கன்றுகளை நடும் நிகழ்வொன்றினை ஒழுங்குசெய்திருந்தது.



'மகாவலி கங்கையின் இருபுறங்களையும் மண் அரிப்பில் இருந்து பாதுகாப்போம் ' எனும் இத்திட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள், மகாவலி அதிகார சபை மற்றும் இலங்கை வங்கி உத்தியோஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

# கராத்தேயில் சாதித்த சகோதரிகள்




(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை தேசிய கராத்தே சம்மேளனத்தினால் நடத்தபட்ட தேசிய மட்ட கராத்தே போட்டியில் சகோதரிகள் மூவர் முதல் மூன்று இடங்களையும் கைப்பற்றிச் சாதித்துள்ளனர். பண்டாரகம அரங்கில் அண்மையில் இந்தப் போட்டி நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட வாழைச்சேனை இளைஞர் விளையாட்டு கழக உறுப்பினர்களான எஸ்.டென்சிகா தங்க பதக்கமும் எஸ்.மதுர்ஷினி மற்றும் எஸ்.சிலோசிகா ஆகிய இருவரும் வெண்கலபதக்கத்தையும் பெற்று வாழைச்சேனை மண்ணிற்கு பெருமை தேடி தந்துள்ளனர்.

இவர்கள் மூன்று பேரும் ஒரே குடும்பத்தை சேர்ந்த சகோதரிகளாவர்.

# கம்பனிகளுடன் எவ்வித சமரசமும் இனி கிடையாது

## இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் திட்டவட்டம்

(ஹஸ்பர் ஏ.எச்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்புத் தொடர்பில் தோட்ட நிர்வாகங்களுடன் எந்தவித சமரசத்திற்கும் இடமில்லை என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான்.

1200 ரூபாய் சம்பள அதிகரிப்பே வழங்க முடியும் என்று தோட்ட நிர்வாகங்கள் அறிவித்துள்ள நிலையிலேயே சமரசம் கிடையாது என்று செந்தில் தொண்டமான் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

முதலாளிமார் சம்மேளனத்தின் ஊடக பேச்சாளர் ரொஷான் ராஜதுரை தோட்ட தொழிலாளர்களுக்கு 1200 ரூபாய் சம்பளம் வழங்கப்படும் என ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்திருந்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு குறித்து பேச்சு நடத்தப்பட்டபொழுது சம்பள உயர்வு வழங்க முடியாது என தொடக்கத்தில் நிறுவனங்கள் தெரிவித்து வந்தன. கடும் அழுத்தத்திற்கு பிறகு ஊக்குவிப்பு தொகை மாத்திரம் வழங்க தயார் என தெரிவித்தனர்.

இந்நிலையில், அரச வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதை அடுத்து, வேறு வழியின்றி தற்போது கம்பனிகள் 1200 ரூபா அடிப்படை சம்பளம் வழங்க முன்வந்துள்ளனர். ஒரு வருட காலமாக ஒரு ரூபாய் சம்பள உயர்வுகூட வழங்க முடியாது என தெரிவித்த கம்பனி,தற்போது 200 ரூபாய் அதிகரிப்பு வழங்க முன்வந்தமைக்கான காரணம் ஆளும் தரப்பால் அரச வர்த்தமானி வெளியிடுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும்.

அதனால் கம்பனிகளுடன் இனி எவ்வித சமரசமும் கிடையாது என செந்தில் தொண்டமான் தெரிவித்ததுடன்,ஆளும் தரப்பால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை கம்பனி அமுல்படுத்தாவிடின் கம்பனியின் முதன்மை இயக்குனர் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் செந்தில் தொண்டமான் தெரிவித்தார் என்று அவரது ஊடகப் பிரிவு தெரிவித்தது.



## சாத்வீக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தருணங்களிலும் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை உன்னிப்பான இராஜதந்திர நோக்கோடு நாம் கையாள வேண்டும்.

ஒரு ஜனநாயக அமைப்பிலே, எண்ணிக்கையிலே குறைவானவர்களாக இருக்கின்ற ஒரு தேசம் கைக்கொள்ள வேண்டிய அத்தியாவசிய அணுகுமுறை அது. நாம் வலியுறுத்துகின்ற தமிழ் தேசியப் பிரச்சினை, இலங்கையின் பிரதானமான தேசியப் பிரச்சினை என்பதை இலங்கையில் வாழும் மற்றைய சமூகத்தினருக்கும் நாம் பொருத்தமான முறைகளில் விளங்கப்படுத்த வேண்டும். எம்மை ஒரு தேசமாக அங்கீகரிப்பது தமக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்கின்ற உண்மையை அவர்களும் உணரச்செய்தல் வேண்டும்.

எமது போராட்டம் நீதிக்கான போராட்டம்; நியாயமான அரசியல் உரிமைகளுக்கான போராட்டம். அநீதி, அநியாயம் ஒருபோதும் வென்றதில்லை, எமது போராட்டம் நீண்ட நெடியதானதாக இருந்தாலும், அறவழியில் சாத்வீக முறைகளைக் கைக்கொண்டு அதிலிருந்து அணுவளவும் பிசகாமல் போராடுவோமானால் எமக்கான நீதி கிடைத்தேயாகவேண்டும். அப்படியானதொரு தூய்மையான அறவழிப் போராட்டத்தில் இணைந்துகொள்ளுமாறு அனைவருக்கும் அறைகூவல் விடுக்கின்றேன். எதிர்காலத்தை நோக்கி நம்பிக்கையோடு சேர்ந்து பயணிப்போம் - என்றுள்ளது.

## முள்ளிவாய்க்கால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்களில், அவர்களின் பிரதான உணவாக இருந்தது கஞ்சி மட்டுமே. சிவப்புப்பச்சை அரிசியில் தேங்காய்ப் பாலும் உப்பும் அற்ற கஞ்சி மட்டுமே அனைவருக்குமான பொது உணவாக அங்கு வழங்கப்பட்டது.

இனப்படுகொலையின் நினைவாகவும் அதனை இளைய தலைமுறையினருக்குக் கடத்தும் விதமாகவும் முள்ளிவாய்க்கால் கஞ்சி ஒரு குறியீடாக இந்த நினைவேந்தல் வாரத்தில் அனைவராலும் பகிரப்பட்டு வருகின்றது. கிழக்கில் கொக்கட்டிச்சோலையிலும் வடக்கில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கிளிநொச்சி, விசுவமடு, புதுக்குடியிருப்புப் பகுதிகளிலும் நேற்று முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

மக்களில் பலரும் முள்ளிவாய்க்கால் கஞ்சியை வாங்கிப் பருகியதுடன், தமது கடந்த காலப் பேரவலங்களை, இனப்படுகொலை நாட்களை நினைவுகூர்ந்தனர்.

## செயற்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று முழு உலகமும் காலநிலை மாற்றத்தால் பெரும் அச்சுறுத்தலைச் சந்தித்து வருகிறது. இந்நாட்களில் நாம் எதிர்கொள்ளும் கடுமையான சூரிய வெப்பம் நாம் இதுவரை சந்திக்காத ஒரு சூழ்நிலை. இந்தக் காலநிலை வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த இலக்கு நிர்ணயித்து செயல்பட வேண்டிய கடினமான சூழ்நிலையை இன்று உருவாகியுள்ளது. இத்துடன், கடும் நீர் பிரச்சினையையும் சந்திக்க வேண்டியுள்ளது. பௌத்த தர்மத்தின்படி இந்தச் சிக்கலை எவ்வாறு எதிர்கொள்வது என்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்த இரண்டு அல்லது மூன்று தசாப்தங்களில் உலகின் முக்கிய பிரச்சினையாக காலநிலை மாற்றப் பிரச்சினை மாறும். புத்தரின் போதனைகளின்படி பார்த்தால் நாகரீகத்தின் பேராசையின் காரணமாகவே நாம் இந்த நிலையை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது.

அனைவரும் வேகமாக முன்னேற விரும்பினர். வாகனங்களின் பயன்பாடு அதிகரித்து வருவதால், சுற்றுச்சூழலுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. அதன்படி மனித சமுதாயம் சுற்றுச்சூழலுக்கு பெரும் கேடு விளைவித்துள்ளது. எனவே, காலநிலை மாற்றத்தை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பதில் நாம் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும்.

மேலும் உலகம் இன்று விரைவான தொழில்நுட்ப வளர்ச்சியை நோக்கி நகர்கிறது. குறிப்பாக 1945இல் அணுகுண்டு வெடித்தபோது, இனி தொழில்நுட்ப முன்னேற்றம் இருக்காது என்று கருதப்பட்டது. ஆனால் தற்போது அனைத்துத் துறைகளிலும் தொழில்நுட்பத்தில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பத் துறையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நாங்கள் பாடசாலையில் படிக்கும் போது கணனி, கையடக்கத்தொலைபேசி எதுவும் இருக்கவில்லை. ஆனால் தற்போது, நவீன தொழில்நுட்ப வளர்ச்சியால், இன்று செயற்கை நுண்ணறிவு வரை சென்றுள்ளோம்.

இப்போது இருப்பது செயற்கை நுண்ணறிவின் ஆரம்பமாகும். அடுத்த இரண்டு தசாப்தங்களில் செயற்கை நுண்ணறிவு எங்கே செல்லும் என்ற கேள்வியை நாம் எதிர்கொள்கிறோம். செயற்கை நுண்ணறிவுக்கும் புத்தமதத்துக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

நம் மனதால் அனைத்தும் கட்டுப்படுத்தப்படுகிறது என்பதே புத்தரின் போதனைகள் சுட்டிக்காட்டுகிறது. மனதைக் கட்டுப்படுத்தினால் முன்னேறலாம். மனதைக் கட்டுப்படுத்தாவிட்டால் நமக்கு எதிர்காலம் இல்லை. மனதைக் கட்டுப்படுத்துவது மனிதனுக்கு மட்டுமே உள்ளது. அதனால்தான் புத்தரின் போதனைகள் மனித குலத்திற்காக செய்யப்பட்டது.

மனதைக் கட்டுப்படுத்தினால் பேராசையை ஒழிக்க முடியும். இந்த மனித மனதிற்கு இணையாக செயற்கை நுண்ணறிவு தற்போது வந்துவிட்டது. செயற்கை நுண்ணறிவுக்கு பல்வேறு தகவல்களை இணைக்க முடியும். செயற்கை நுண்ணறிவு அதற்கேற்ப செயல்படுகிறது. அப்படியானால், புத்தரின் போதனைகளுக்கும் செயற்கை நுண்ணறிவுக்கும் இடையிலான தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

செயற்கை நுண்ணறிவு வேறு மதத்தைப் போதிக்குமானால் அது பௌத்தத்திற்கு அச்சுறுத்தலாக அமையும். எனவே, நாம் அது குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். வரலாற்று சிறப்புமிக்க அனுராதபுர காலத்தில் பௌத்தம் இலங்கைக்கு வந்ததுடன், அதன் பின்னர் பௌத்தம் பல்வேறு அழுத்தங்களைச் சந்தித்தது. இந்து மதம், மஹாயான தர்மம் மற்றும் அரசியல் சூழ்நிலைகள் அதில் தாக்கம் செலுத்தியுள்ளன. இக்காலத்தில் செயற்கை நுண்ணறிவும் அதில் இணைகிறது.

அப்படியானால் செயற்கை நுண்ணறிவு வேறு ஒரு தர்மத்தைப் போதிக்குமா என்று சிந்திக்க வேண்டும். மக்கள் தங்கள் கையில் இருக்கும் கைபேசியுடன் தர்மத்தை இணைத்தால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை சிந்திக்க வேண்டும். இது பௌத்தம் மட்டுமன்றி ஏனைய மதத்தினரும் எதிர்கொள்ளும் பிரச்சினையாக மாறியுள்ளது.

எனவே, செயற்கை நுண்ணறிவை கட்டுப்படுத்தவும் புதிய சட்டவிதிகளை நாம் கொண்டு வருகிறோம். தொழில்நுட்ப மேம்பாட்டு சட்ட வரைவை தொழில்நுட்ப அமைச்சு தயாரித்துள்ளதுடன், அதன் கீழ் செயற்கை நுண்ணறிவு மையம் ஒன்றை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஏற்கனவே செயற்கை நுண்ணறிவை நிர்வகிக்கும் சட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளன. நாமும் அதையே செய்ய வேண்டும்.

புத்தரின் போதனைக்கும் செயற்கை நுண்ணறிவுக்கும் இடையிலான தொடர்பு குறித்த ஆராய்ச்சியைத் தொடங்க அடுத்த ஆண்டு ஒரு பில்லியன் ரூபாய் ஒதுக்க எதிர்பார்க்கப்படுகிறது. அதை இந்த ஆண்டு நிறைவேற்ற எதிர்பார்க்கப்பட்டாலும், செயற்கை நுண்ணறிவைக் கட்டுப்படுத்துவது தொடர்பான சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் இன்னும் நிறைவேற்றப்படாததால், அடுத்த ஆண்டுக்கு அது ஒத்திவைக்கப்பட்டது. அதற்கேற்ப புதிய சட்டங்களை முன்வைத்து அந்த செயற்பாடுகளை ஆரம்பிக்க எதிர்பார்க்கின்றோம் என்றார்.

## எந்தவொரு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைவரும் அச்சமடைந்துள்ளனர். மொட்டு, யானை, திசைக்காட்சி என அனைவரும் எம்மைக் கண்டு அஞ்சுவதால் அவர்கள் அனைவரும் இணைந்து எமக்கெதிராக சதித்திட்டம் தீட்டிக்கொண்டிருக்கின்றனர். எந்தவொரு சதித்திட்டத்தாலும் 220 இலட்சம் மக்களை ஏமாற்ற முடியாது.

அதிகாரம் எதுவுமின்றி பல சேவைகளை நாட்டுக்கு செய்யும் ஒரேயொரு எதிர்க்கட்சி ஐக்கிய மக்கள் சக்தி மாத்திரமே. அதே போன்று தற்போது வழங்கும் சகல வாக்குறுதிகளையும் எமது ஆட்சியில் நிச்சயம் நிறைவேற்றுவோம் என உறுதியளிக்கின்றேன். புதிய நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விவசாயத்தை அடுத்த மட்டத்துக்கு எடுத்துச் செல்வோம்.

விவசாயிகளின் பயிர்செய்கைக் கானஸ்திரவிலை நிர்ணயிக்கப்படும். அதேபோன்று விவசாயிகளுக்கான ஓய்வூதிய முறைமையையும் நாம் மறக்கவில்லை. இவ்வாண்டிறுதிக்குள் விவசாயிகளுக்கான ஓய்வூதிய முறைமையை நடைமுறைப்படுத்துவோம். யானை - மனித மோதலுக்கு நிரந்தர தீர்வு வழங்கப்படும். விவசாயிகளின் விவசாய நிலத்துக்கான உரிமம் வழங்கப்படும்.

சஜித் பிரேமதாச எந்தவொரு நாட்டுக்கும் அடிபணியமாட்டார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதேபோன்று வர்த்தக நிறுவனங்களால் என்னை விலைக்கு வாங்கவும் முடியாது. எமது மக்களின் உரிமைகளைப் பாதுகாத்துக்கொண்டு, வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுவோம் என்றார்.

## இலங்கையர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடும் நிகழ்வு நேற்று கொழும்பு தாமரைத்தடாக அரங்கில் டி.பி.எடியூகேசன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே தம்மிக்க பெரேரா இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தம்மிக மற்றும் பிரசிலா மன்றம் 2016ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. கல்வி வளம் மிக்க நாட்டை எப்படி உருவாக்கலாம் என்று சிந்தித்தே இந்த மன்றம் உருவாக்கப்பட்டது. இன்று ஒழுக்கமான பாடசாலை மாணவர்களை உருவாக்குவதற்குத் தேவையான வசதிகளை செய்து கொடுக்க முடிந்துள்ளது.

பதினைந்து இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு எங்களால் வசதிகளை செய்து கொடுக்க முடிந்ததுள்ளது. முன்பள்ளிக் குழந்தைகளுக்கான தனித் திட்டத்தையும் நாம் செயல்படுத்தியுள்ளோம்.

சிறுவர் உளவியலாளர்களின் வழிநடத்தலின் கீழ், இலங்கையின் பாரம்பரியத்திற்கு ஏற்ற கல்வியை சிறுவர்களுக்கு வழங்குவதற்கான முயற்சிகளை எடுத்தோம். அதற்காக 1000 பாலர் பாடசாலைகளை உருவாக்கி சிறுவர் பராயத்தை மேம்படுத்தியுள்ளோம்.

தெற்காசியாவில் எம்மை போன்ற வலுவான கலாச்சாரம் கொண்ட சமூகம் இல்லை. மேலும், இலங்கையின் கல்விமுறை மிகவும் உயர் மட்டத்தில் இருந்தது. இந்த இரண்டு விடயங்களையும் கருத்தில் கொண்டு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் மொழி அறிவை வழங்கி தர்மமும் தொழில்நுட்பமும் நிறைந்த இளைஞர்களை உருவாக்க முயற்சிக்கிறோம் என்றார்.

## தாளையடியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த அவர்கள் விசாரணைகளை மேற்கொண்டனர். நீதிமன்ற உத்தரவின் பின்னர் சடலம் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் உடற்கூற்றாய்வுகளுக்காக ஒப்படைக்கப்பட்டது.

துணியொன்றினால் பெண்ணின் கழுத்தை நெரிக்கப்பட்டதில் அவர் மூச்சுத் திணறி உயிரிந்தார் என்று உடற்கூறாய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பெண்ணின் கணவரைக் கைது செய்துள்ள மருதங்கேணி பொலிஸார், தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

## இலங்கையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராகநியமிக்கப்பட்டால் இலங்கையில் புறக்கணிக்கப்பட்ட சமூகங்களுக்கு ஆதரவளிக்க எதிர்பார்த்திருப்பதாக தெரிவித்துள்ள அவர், இலங்கையின் மனித உரிமை நிலவரம் குறித்த அமெரிக்காவின் கரிசனைகளை பகிர்ந்துகொள்வதாகவும் தெரிவித்தார்.

''இலங்கையில் துடிப்பான சிவில் சமூகம் காணப்படுகின்றது நான் தூதுவராக நியமிக்கப்படுவது உறுதி செய்யப்பட்டால் இலங்கை அமெரிக்க சமூகங்கள் உட்பட மக்கள் மத்தியிலான தொடர்புகளை வலுப்படுத்த எண்ணியுள்ளேன்'' எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

"இலங்கையில் புறக்கணிக்கப்பட்ட சமூகங்களிற்கு ஆதரவளிக்க தயாராகவுள்ளேன் உண்மை நீதி நல்லிணக்கம் பொறுப்புக்கூறலிற்கு நான் ஆதரவளிப்பேன்'' எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க செனெட்டின் வெளிவிவகார குழு இலங்கையின் பொறுப்புகூறும் விவகாரங்களை கையாள்வதற்கான எலிசபெத் கே கோர்ஸ்டின் திறமை திறமை, மாற்றுக்கருத்துக்களை இலங்கை ஆளும்தரப்பிடம் தெரிவிப்பதற்கான திறமை என்பன குறித்துக் கேள்வி எழுப்பியுள்ளது.

இதன்போது இலங்கை நாடாளுமன்றம் சமீபத்தில் நிறைவேற்றிய சட்டங்கள் இலங்கை மக்களிற்கான சுதந்திரங்களை மேலும் முன்னேற்றமாக்குவதற்கான அமெரிக்காவின் முயற்சிகள் குறித்து செனெட்டர் பென்கார்டின் சுட்டிக்காட்டினார்.

''நான் தூதுவராக நியமிக்கப்படுவது உறுதிப்படுத்தப்பட்டால் அவர்கள் பின்பற்றவேண்டிய சர்வதேச தராதரத்திற்கு அனைவரையும் பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்துவேன்'' என எலிசபெத் கே கோர்ஸ்ட் தெரிவித்துள்ளார்.

## வேலைவாய்ப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலகில் உள்ள ஏனைய நாடுகளில் இருந்து தனித்து வாழமுடியாது.

உலகில் தொழில்நுட்பத்தில் நாடுகள் முன்னிலை வகிக்கின்றன. உலக நாடுகள் தொழிநுட்பத்தின் ஊடாக ஒன்றிணைறந்துள்ளது. ஆனால் எமது நாட்டில் சர்வதேச நாடுகளுக்கு இடையில் மோதல் களமாக மாறிவிடும் சூழல்களே உள்ளது. அதற்கு இடமளிக்ககூடாது.

உலகில் போட்டித்தன்மை வாய்ந்ததாக நிலைமைகள் உள்ளன. ஆகவே எமது நாடு சர்வதேச சக்திமிக்க நாடுகளின் மத்தியில் போட்டித்தன்மை மிக்கதாக இருப்பதற்கு இடமளிக்கக்கூடாது என்றார்.

## பெண்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தம்மிக்க பெரேரா ஒரு மாற்றத்தை ஆரம்பித்துள்ளார். பெண்களுக்கு நிகழும் வன்முறைக்கு எதிராக அவர் தொடங்கிய திட்டம் பாராட்டுக்குரியது. டீ.பி.எடியூகேசன் போன்ற செயற்பாடுகள் எதிர்கால கல்வியின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். அன்று நாம் மரத்தடியில், கல் பலகைகளைப் பயன்படுத்தி கல்வி கற்றோம். பின்னர் கட்டடங்கள், புத்தகக் கல்வியில் இணைந்தன. இன்று போல் கையடக்கத் தொலைபேசிகள் இருக்கவில்லை.

கல்வி காலத்துக்குக் காலம் மாறியது. விகாரை கல்வி முதல் பாடசாலைக் கல்வி வரை மாறுகிறது. இன்று ஸ்மார்ட் வகுப்பறை பாடசாலைக்கு வந்துள்ளது. தம்மிக்க பெரேரா டி.பி.எடியூகேசன் மூலம் கல்வியின் புதிய பரிமாணத்தை அறிமுகப்படுத்தி, இந்த நிதியத்தின் செலவில் 600 பாடசாலைகளுக்கு வசதிகள் வழங்கியுள்ளார்.

இதன் காரணமாக டியூஷன் வகுப்பறையும் மாறுகிறது. இதனுடன் செயற்கை நுண்ணறிவும் சேர்ந்தால் கல்வியில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்த முடியும். பிள்ளைகள் இந்தக் கல்வியில் பயன்பெற வேண்டும். நமது கல்வி முறையை மேம்படுத்தி அனைத்துப் பிள்ளைகளுக்கும் கல்வியை வழங்க வேண்டும்.

அனைத்துப் பிள்ளைகளுக்கும் ஒரே அளவிலான கல்வியை நாம் வழங்க முடியாது. ஆனால் தொழில்நுட்பத்தின் மூலம், அனைத்துப் பிள்ளைகளுக்கும் ஒரே அளவிலான கல்வி வழங்கும் திட்டத்தை செயல்படுத்த முடியும்.

பெண்களுக்கு நிகழும் வன்முறைகளுக்கு எதிராக சைகைகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பது இன்று இங்கு அறிமுகப்படுத்தப்பட்டது. பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிரான சட்டத்தை பாராளுமன்றத்தில் கொண்டு வருகிறோம். பெண்களுக்கு எதிரான வன்முறையை எப்படி நிறுத்துவது என்பதை இந்த கை சமிக்ஞைகள் தெரிவிக்கும்.

பெண்களின் உரிமைகளை பாதுகாப்பதில் உறுதியாக உள்ளோம். அதை வார்த்தைகளுக்குள் மட்டுப்படுத்த முடியாது. இந்தச் சைகைகள் மூலம் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை சமூகம் உணர்ந்து அதற்கு எதிராகப் போராட முடியும்.

இது குறித்து பரந்த அளவில் பேசப்படும் என நம்புகிறேன். நம் நாட்டில் செல்வந்தர்கள், நன்கொடையாளர்கள் என்ற இரு வகையினர் உள்ளனர். நன்கொடையாளர்கள் சம்பாதித்து சமூக சேவை செய்பவர். தம்மிக்க பெரேரா அவ்வாறான ஒருவர். பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிராக பெண்களுக்கு வலுவூட்டும் இயலுமை இந்தத் திட்டத்திற்கு உள்ளது.

பொருளாதார நெருக்கடியின்போது பெண்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். உணவுத் தட்டுப்பாடு காரணமாகவும் பெண்கள் மிகவும் அவதிப்பட்டனர். சில குடும்பங்கள் பெண்களால் வழிநடத்தப்பட்டன. அதனால் பெண்களை வலுவூட்ட எதிர்பார்க்கிறோம். பெண்கள் வலுவூட்டலுக்கான சட்டம் மற்றும் பாலின சமத்துவச் சட்டம் என்பன நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளன.

பாலின சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டல் தொடர்பான தேசியக் கொள்கையை அமுல்படுத்துதல், தேசிய மகளிர் ஆணைக்குழுவை நிறுவுதல், பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறிமுறையை நிறுவுதல், பெண்களின் உரிமை மீறல்களுக்கு வழக்குத் தாக்கல் செய்தல் உள்ளிட்ட நோக்கங்களை கொண்டு இந்தச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன் பெண்கள் உரிமை பாதுகாப்பு ஆணைக்குழு ஒன்றும் நிறுவப்படவுள்ளது. எந்தப் பகுதியில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நடந்தாலும் அதற்கான தீர்வுகளை ஆணைக்குழு வழங்கும்.

தொடர்ச்சி 10ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# சம்மாந்துறை வலயப் பணிப்பாளர் உமர் மௌலானா காலமானார்

(வி.ரி. சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் கலாநிதி எஸ் எம் எம். உமர் மௌலானா வெள்ளிக்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் காலமானார் .

மருதமுனையைச் சேர்ந்த பணிப்பாளர் உமர் மௌலானா திடீர் சுகவீனமுற்று ஒரு சில தினங்களாக கல்முனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த வேளையில் காலமானார்.

கலாநிதி உமர் மௌலானா 1984 இல் ஆசிரியராக நியமனம்பெற்று அதிபராக பிரதிக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றி வந்தார்.

2007 இல் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் இணைந்து கொண்ட அவர், மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியின் அதிபராக சீரிய சேவையாற்றியிருந்தார்.

சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனையின் ஒன்பதாவது பணிப்பாளராக 20.01. 2023 சேவையில் இணைந்தார் . எதிர்வரும் செப்டம்பர் மாதம் 60 வயதில் ஓய்வு பெறவிருந்தார்.

சம்மாந்துறை வலயத்தில் 15 மாதங்கள் கடமையாற்றி வந்தவேளையில் இன்று இம் மரணம் சம்பவித்திருக்கின்றது.

சம்மாந்துறை வலய கல்வி அதிகாரிகள் அதிபர்கள் ஆசிரியர்கள் கல்விசார் கவ்வி சாரா ஊழியர்கள் மாணவர் அனைவரும் தமது அனுதாபங்களை தெரிவித்து வருகிறார்கள்.

# மின்னல் தாக்கியதில் எரிந்தது தென்னை



யாழ்ப்பாணத்தில் நேற்றுப் பகல் மின்னல் தாக்கி தென்னை மரம் தீப்பற்றி எரிந்தது.

உடுவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வீடொன்றில் இந்தச் சம்பவம் வெள்ளியன்று இடம்பெற்றது.

மின்னல் தாக்கியதில் அந்த வீட்டிலிருந்த ஒருவரும் சிறு காயங்களுக்கு உள்ளார் என்று யாழ். மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்தது.

கடந்த சில நாட்களாக பகல் பொழுதுகளில் இடியுடன் கூடிய மழை ஆங்காங்கே பெய்கிறது. அப்படி திடீரென பெய்த மழையுடன் தாக்கிய இடியினாலேயே தென்னை மரம் தீப்பற்றி எரிந்ததுடன் ஒருவர் காயமடைந்தார்.

# குழந்தையை பெற்றெடுத்த 15 வயதுச் சிறுமி வைத்தியசாலையில் இருந்து தலைமறைவு

குழந்தை பெற்றெடுத்த சிறுமி ஒருத்தி அந்தக் குழந்தையை வைத்தியசாலையிலேயே விட்டுவிட்டுத் தலைமறைவாகிய சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குழந்தையைப் பெற்றெடுத்தவர் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த 15 வயதுச் சிறுமி என்று தெரிவிக்கப்படுகின்றது. நிறைமாதக் கர்ப்பிணியான சிறுமி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மகப்பேற்று விடுதியில் சேர்ந்துள்ளார். சிறுமியின் தாயாரும் உடன் வந்துள்ளார்கள்.

சிறுமிக்கு அன்று இரவே குழந்தை பிறந்துள்ளது. தாயும் சேயும் நலமாக இருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் நேற்றுக்காலை குழந்தையைப் பெற்றெடுத்த சிறுமியும் அவரது தாயாரும் வைத்தியசாலை விடுதியில் இருந்து தலைமறைவாகிவிட்டனர்.

தாயின்றி குழந்தை நீண்ட நேரம் கதறியதைத் தொடர்ந்து விழிப்படைந்த வைத்தியசாலை நிர்வாகம் எங்கு தேடியும் இருவரையும் காணாத நிலையில் அவர்கள் காணாமற்போயுள்ளனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

# இணுவில் வைத்தியசாலையில் புதிய விடுதிகள் திறந்து வைப்பு

இணுவில் மக்லியோட் மருத்துவமனையில் புதிய விடுதிகள் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டன.

126 வருடம் பழமை வாய்ந்த இணுவில் மக்லியோட் வைத்தியசாலையில் புகழ்பெற்ற மகப்பேற்று வைத்தியர் டாக்டர் கெங்கம்மாவின் ஞாபகார்த்தமாக புதிதாக அமைக்கப்பட்ட மகப்பேற்று, மருத்துவ, சத்திரசிகிச்சைவிடுதிகளே திறந்து வைக்கப்பட்டுள்ளன.

நிகழ்வு சிறுவர்கள்,குழந்தைகள் சத்திரசிகிச்சை நிபுணர் பா.சயந்தன் தலைமையில் இடம்பெற்றது. யாழ். மாவட்ட பதில் செயலாளர் பிரதீபன் தலைமை அதிதியாகக் கலந்துகொண்டு புதிய விடுதிகள் அடங்கிய கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்தார்.

நிகழ்வில் விருந்தினர்களாக தென்னிந்திய திருச்சபையின் பேராயர் பத்மதயாளன், சத்திரசிகிச்சை பேராசிரியர் வைத்திய நிபுணர் எஸ்.ரவிராஜ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக மகப்பேற்று வைத்திய நிபுணர்களான ஜெ.கஜேந்திரன், என்.சரவணபவ, வை.சிவாகரன், ஆர்.துவாரதீபன் ஆகியோரும், விஷேட அதிதியாக இலங்கை நிர்வாக சேவையின் உயரதிகாரி பொ.பிறேமினியும் கலந்து சிறப்பித்தினர்.

இந்தக் கட்டடத் தொகுதியானது வைத்திய நிபுணர் பா.சயந்தன் மற்றும் அவரது பாரியார் கிருபாளினி ஆகியோரது சொந்த நிதியில் அமைக்கப்பட்டுள்ளது.

# 8 அடி உயரத்துக்குக் கஞ்சாச் செடி வளர்த்தவர் சுன்னாகத்தில் கைது



யாழ்ப்பாணம் - சுன்னாகம் பொலிஸ் பிரிவில் பத்திரகாளிகோவில் அருகாமையில் உள்ள வீட்டில் 8அடி700உது நீளமான கஞ்சா செடியினை வளர்த்தவர் கைது செய்யப்பட்டார்.

யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் விசாந்த தமையிலான யாழ் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த ரகசிய தகவலில் கைது செய்யப்பட்டனர்.

யாழ் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரும் யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரும் இணைந்து தேடுதலில் ஈடுபட்டு வீட்டில் வளர்த்ததாக 46 வயதான வீட்டின் உரிமையாளரை கைது செய்துள்ளனர்.

## அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள

# அரச வைத்தியசாலைகளுக்கு கிழக்கு ஆளுநர் திடீர் வருகை



(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அம்பாறை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரச வைத்தியசாலைகளுக்கு நேற்று திடீரென வருகை தந்தார்.

அவருடன் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் நடராஜா சிவலிங்கம் மற்றும் அதிகாரிகளும் வருகை தந்திருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி, ஆரயம்பதி, போரைத்தீவுப்பற்று வைத்திய சாலைகளுக்கும் அம்பாறை மாவட்டத்தில் காரைதீவில் உள்ள வைத்தியசாலைக்கும் இவ்வாறு கண்காணிப்புப் பயணம் சென்றார் ஆளுநர்.


வைத்தியசாலைகள் எதிர் நோக்கும் தேவைகள் பிரச்சினைகள் குறித்து அதிகாரிகள் மற்றும் பணியாளர்களிடம் நேரில் கேட்டறிந்தார் ஆளுநர்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், வைத்தியர்கள் மற்றும் தாதியர்களுடனும் வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகள் குறித்து ஆராய்ந்தார்.

அரச வைத்தியசாலை விடுதிகளில் தங்கி சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளிடம் அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை திருப்தி அளிக்கிறதா என்பதையும் கேட்டறிந்தார்.

வைத்தியசாலைகளில் காணப்படும் பிரச்சினைகளை கேட்டறிந்த ஆளுநர் அதற்கான தீர்வினை வழங்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரையும் விடுத்தார்.

# நல்லூரில் இருந்து பாத யாத்திரை சிவனொலிபாத மலைக்கு 3 நாள்



யாழ்ப்பாணம் நல்லூரில் இருந்து சிவனொளிபாத மலைக்கு மூன்று நாள் தல யாத்திரை வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

நல்லூர் கந்தசுவாமி கோவிலில் காலைவழிபட்டபின்னர் பக்தர்களால் இந்தத்தலயாத்திரை ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையும் மலையக இந்து குருமார் ஒன்றியமும் இணைந்து யாத்திரையை ஒழுங்குபடுத்தின.

# திருமலை சிறுவர் அபிவிருத்தி நிதியத்தால் மாணவர்களுக்கு சைக்கிள் வழங்கல்







(ஹஸ்பர் ஏ.எச்)

மாணவர்களுக்கு சைக்கிள் வழங்கும் நிகழ்வு, திருகோணமலை மாவட்ட செயலகத்தில், சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் ஏற்பாட்டில் நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்றது.

இலங்கை சிறுவர் நிதியத்திற்கு, ஜப்பான் சிறுவர் நிதியத்தால் வழங்கப்பட்ட சைக்கிள் , சிறுவர் நிதியத்தின் பங்காளரான சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் குச்சவெளி, கோமரங்கடவெல, மொரவெள பிரதேச செயலக பிரிவை சேர்ந்த அறுபது மாணவர்களுக்கு சைக்கிள் வழங்கப்பட்டதுடன் , பாடசாலை கல்வியை நிறைவு செய்த மாணவர்களுக்கான தொழிற்பயிற்சிக்கான காசோலைகளும் மற்றும் சுயதொழிலுக்கான காசோலைகளும்இதன்போதுவழங்கிவைக்கப்பட்டன.

திருகோணமலைசிறுவர்அபிவிருத்திநிதியத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அரியரட்ணம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதமவிருந்தினராக திருகோணமலை மாவட்ட செயலாளர் சாமிந்த ஹெட்டியாராச்சி, மேலதிக மாவட்ட செயலாளர் ஜே.எஸ்.அருள்ராஜ் ,மாவட்ட செயலக ஊழியர்கள், மாகாண கல்வி திணைக்கள அதிகாரிகள்,திருகோணமலைமற்றுதிருகோணமலை வடக்கு கல்வி வலய அதிகாரிகள் அதிபர்கள் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.(05)

# கவிழ்ந்தது பேருந்து பயணிகள் அருந்தப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேரூந்து வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளான-து, எனினும் பேரூந்தில் பயணித்தவர்கள் நூலிழையில் உயிர் பிழைத்தனர்.

கண்டியிலிருந்து பதியபெலெல்லைக்கு பயணித்த இ.போ.சபைக்கு சொந்தமான பேரூந்தே மயிலப்பிட்டிய பகுதியில் காலை 10 மணியளவில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

விபத்து சம்பந்தமாக கண்டிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கரு ஜெயசூரிய தலைமையில் திருமலையில் கலந்துரையாடல்

(ஹஸ்பர் ஏ.எச்)

ஜனநாயக ரீதியான அரசியலின் எதிர்காலம் தொடர்பிலான திருகோணமலை மாவட்டத்துக்கான கலந்துரையாடல் திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் நேற்று முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் இடம்பெற்றது. குறித்த கலந்தாலோசனையைசமூகநீதிக்கான தேசிய இயக்கம் ஏற்பாடு செய்திருந்தது.

'எதிர்கால சந்ததியினருக்கான போற்றத்தக்க நாடு' எனும் தொனிப்பொருளின் கீழ் இடம்பெற்ற கலந்துரையாடலில் நல்லாட்சியை நோக்கிய பயணத்திற்குத் தெரிவு செய்ய வேண்டிய பாதை, நாட்டின் அரசமைப்பு, அதன் உருவாக்கத்தின் போது தெரிவு செய்ய வேண்டிய வழி உள்ளிட்ட தேர்தல் நடவடிக்கைகள் என பல விடயங்கள் இதன் போது கலந்துரையாடப்பட்டன.

சமூகநீதிக்கானதேசியஇயக்கத்தின் தலைவர் முன்னால் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், முன்னால் மாகாண சபை உறுப்பினர்கள், முன்னால் உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், உறுப்பினர்கள் சிவில் சமூகஅமைப்புக்களின்பிரதிநிதிகள்,அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# இனங்களுக்கு இடையிலான சமூக ஒற்றுமை தினம் நேற்று

## அம்பாறையில் கடைப்பிடிப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறையில் இனங்களுக்கிடையிலான சமூக ஒற்றுமை தினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது.

சமாதானம்சமூகப்பணிநிறுவனம் சார்பில் முன்னெடுக்கப்பட்ட இந்த நிகழ்வில்வரப்பத்தான்சேனைசந்தியில் இருந்து இறக்காமம் கலாசார மண்டபம் வரை விழிப்புணர்வு ஊர்வலமும் இடம்பெற்றது.

சமூகங்களுக்கு இடையில் சகவாழ்வைக் கொண்டு வருமுகமாக தமிழ், முஸ்லீம், பௌத்தர்கள் அனைவரும்இணைந்தஇந்தசமாதான நடைபவனியை முன்னெடுத்தனர்.

பதியத்தலாவ,இறக்காமம், தமன, நிந்தவூர், காரைதீவு,ஆகிய பிரதேச நல்லிணக்க குழுக்கள் நிகழ்வில் கலந்துகொண்டன.

அம்பாரை மாவட்ட மேலதிகச் செயலாளர் வேத.ஜெகதீசன், சமாதானமும் சமூகப் பணியும் நிறுவனத்தின் பணிப்பாளர் த.தயாபரன், த.ராஜேந்திரன், ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோரும் நிகழ்வில் பங்கேற்றனர்.

மூவின மக்களும் நாட்டில் சமாதானத்தையும்நல்லிணக்கத்தினையும் மக்களிடையே எற்படுத்த வேண்டும். என்பதற்காக இச் சமூக வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இறக்காமம் கலாசார மண்டபத்தில் நான்கு மதங்களின் கலை கலாசார நிகழ்வுகள் இடம் பெற்றிருந்தது.

சமூகங்களுக்குடையில் உள்ள தப்பான எண்ணங்களை அகற்றி நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்திபணியாற்றும்விதத்தில்இந்தச் செயற்பாடுகள்முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

## பெண்களை...

(எட்டாம் பக்கத் தொடர்ச்சி)

கல்வித் துறையில் பெண்கள் மிகவும் வெற்றிகரமானவர்களாக மாறிவருகின்றனர். பெண்களுக்கு முன்னாலிருக்கும் தடைகளை நீக்க வேண்டியது நமது பொறுப்பாகும்.பெண்நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான மன்றம் ஏற்கனவேஉருவாக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கும் இது சார்ந்த பொறுப்புகள் உள்ளன. பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் எதிர்கொள்ளும்பிரச்சனைகளைத் தீர்த்துசமூகநீதியைநிலைநாட்டவே நாங்கள் பாடுபடுகிறோம்.

இரண்டு சட்டங்களையும் ஜூன் மாதம் நிறைவேற்ற முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது தொடர்பில் நான் ஏற்கனவே பிரதமருடன் கலந்துரையாடியுள்ளேன்.

நாடாளுமன்றஉறுப்பினர்களின் எண்ணிக்கையில் பெண்களின் பிரதிநிதித்துவத்தைகுறைந்தபட்சம் 25மூ ஆக அதிகரிக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. அத்துடன், மாகாண சபைகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க எதிர்பார்க்கின்றோம்.

மேலும், பெண்களின் அரசியல் உரிமைகளை அங்கீகரிப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம். 2030 ஆம் ஆண்டுக்குள் பெண்கள்அரசியல்கட்சியை அங்கீகரிக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும். இலங்கையில் பெண்களின்உரிமைகளை உறுதிப்படுத்தவும் பெண்களுக்கு உரிய அந்தஸ்த்தை வழங்கவும் முன்னெடுப்புகளை மேற்கொண்டுவருகிறோம் என்றார்.




# பதுளை- மஹியங்கன வீதி விபத்தில் ஒருவர் இறப்பு

## மேலும் நால்வர் காயம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

பதுளை - -மஹியங்கன வீதியில் புவக்கொடமுல்ல பிரதேசத்தில இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேரூந்தும் முச்சக்கர வண்டியும்நேருக்குநேர்மோதுண்டதில் முச்சக்கர வண்டியில் பயணித்த ஒருவர் உயிரிழந்தார். மேலும் நான்கு பேர் காயமடைந்து பதுளை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்து சம்பந்தமாக பதுளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நிதி ஒதுக்கீடு

(நூருல் ஹுதா உமர்)

அட்டாளைச்சேனை பிரதேச சபை மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச செயலக நிர்வாகத்தின் கீழுள்ள பாலமுனை பிரதேச பொது நிறுவனங்கள், பள்ளிவாசல்கள் மற்றும் பாடசாலைகளுக்கு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடுகளை வழங்கியுள்ளார். அதற்கான ஆவணம் அட்டாளைச்சேனை பிரதேச சபை முன்னாள் உப தவிசாளர் எஸ்.எம்.எம். ஹனீபா ஏற்பாட்டில் நேற்று பாலமுனையில் வைத்து கையளிக்கப்பட்டது.

அட்டாளைச்சேனை பிரதேச சபை முன்னாள் உப தவிசாளர் எஸ்.எம்.எம். ஹனீபா பிரதிநிதித் துவப்படுத்தும் வட்டாரத்தில் அமைந்துள்ள தாருள் ஹசனாத் வித்தியாலயம், அல்-ஹிதாயா மகளிர் கல்லூரி, இப்னுசீனா கனிஷ்ட கல்லூரி, பாலமுனை முனவ்வறா பள்ளிவாசல், பெண்கள் கிராம அபிவிருத்தி சங்கம், மரூன் விளையாட்டு கழகம், அரபா விளையாட்டு கழகம், சீடோ (றீசிம்நு) அமைப்பு, ஹில்ப் சமூக சேவைகள் அமைப்பு, சிலோன் சரிட்டி, ரியாளுள் ஜன்னா ஜும்மா பள்ளிவாசல், ட்ரை ஸ்டார் விளையாட்டு கழகம், எவர் கிரீன் விளையாட்டு கழகம், இஹ்லாஸ் சணசமூக நிலையம் போன்றவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டு ஆவணங்கள் அந்தந்த நிறுவனங்களின் தலைவர்களிடம் வழங்கப்பட்டன.

இதன்போது பாடசாலை அதிபர்கள், நாடாளுமன்ற உறுப்பினரின் ஆலோசகர்களான எம்.ஜே.எம். அன்வர் நௌஷாத், ஏ.கலீலுர் ரஹ்மான், மக்கள் தொடர்பாடல் செயலாளர் யூ.எல்.என். ஹுதா உமர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்கள், பொது அமைப்புக்களின் பிரதானிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் முஸ்லிங்களின் அபிலாசைகள், முஸ்லிங்களின் அரசியல் போக்குகள், பாலமுனை அபிவிருத்தி மற்றும் பிராந்திய மக்களின் தேவைகள், முஸ்லிங்களுக்கு இருக்கும் சவால்கள், தீர்வுகள் பெற எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், பொருளாதார மேம்பாடு தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

பாலமுனை ஜும்மா பள்ளிவாசலுக்கு வருகைதந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் பள்ளிவாசல் கட்டட நிர்மாண பணிகளுக்கு நிதியும் ஒதுக்கினார்.




# காரைதீவின் கண்டல் காடுகளில் பல்கலை மாணவர்கள் பயணம்



(எம்.எம்.ஜெஸ்மின்)

தென்கிழக்கு பல்கலை மாணவர்கள் அம்பாறை மாவட்டத்தின் கண்டல் காடுகளுக்கு ஒரு களப் பயணம் மேற்கொண்டனர். சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் பாதுகாப்புத் தொடர்பானதாக அவர்களது களப் பயணம் அமைந்திருந்தது.

அம்பாறை மாவட்டத்தில் காணப்படும் மிக முக்கியமான கண்டல்சூழற்றொகுதியை தன்னகத்தே வைத்துள்ள ஒன்றிரண்டுபிரதேசங்களில்காரைதீவும் ஒன்றாகும்.

மிக மிக முக்கியமான பிரதேசமாக அதன் வனப்பும், அழகும், தாவரங்களும், செடி, கொடிகளும், விலங்குகளும்பறவைகளும்தனிச்சிறப்புக்குரியவை. இவை தனியே கிண்ணமரங்களை வைத்திருக்கும் அதிசயக் காடாகும்.

காரைதீவு பிரதேச செயலாளர் .எஸ். ஜெகராஜன் வழிகாட்டலில், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பிரயோகவிஞ்ஞானபீடத்தின்சிரேஷ்டவிரிவுரையாளர் ஏ.எம்.றியாஸ் அஹமட்டினால் காரைதீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், காரைதீவு சுற்றுச்சூழல் கழக உறுப்பினர்கள், காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி மற்றும் சண்முகா மகாவித்தியாலய பாடசாலைகளின் சுற்றாடல் முன்னோடிக் கழக ஜனாபதி பதக்கத்திற்காக ஆய்வுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் மாணவர்கள் ஆகியோர்களின் பங்குபற்றதலுடன் காடறிதல் எனும் 'சூழலியல் நடை' களப் பயணம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

பிரதேசத்தின் அற்புத வனத்தின் மீதான ஆய்வுகள் பல்கலைக்கழக மாணவர் மட்டத்தில் தொடங்கப்பட்டிருப்பதாகவும் அதற்குரிய அத்தனை செழிப்புக்களையும், பெறுதிகளையும் இந்தக் காடு வைத்திருக்கின்றது எனவும் பெரும்பாலான எல்லாக் கிராமங்களுமே காட்டை மூடி ஏப்பம் விட்ட சமயத்தில், காரைதீவின் இந்தக் கண்டல் காடு, காரைதீவுக்கு பாரம்பரியமாகும் (Heritage of Karaitheevu). இந்தப் பாரம்பரியத்தை அழிந்து போகாமல் காப்பது அனைவரின் கடமையாகும் எனவும் வளவாளராக கலந்து கொண்ட சிரேஷ்ட விரிவுரையாளர்களினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## அரோகரா கோஷம் முழங்க

# கதிர்காமத்துக்கான பாதயாத்திரை சந்தியிலிருந்து நேற்று ஆரம்பம்



(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கையின் மிக நீண்ட கதிர்காமம் பாதயாத்திரை யாழ்ப்பாணம் செல்வசந்நதி முருகன் ஆலயத்திலிருந்து நேற்று ஆரம்பமாகியது.

இந்துக்களின் பாரம்பரிய கதிர்காமத்திற்கான பாதயாத்திரை வழமைபோல இம்முறையும் யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் விசேட பூஜைகள் இடம்பெற்று அடியார்கள் பாதயாத்திரையினை அரோகரா கோஷங்கள் முழங்க பாதயாத்திரையினை ஆரம்பித்தனர்

கடந்த வருடத்தினைப் போன்று இவ்வருடமும் ஜெயாவேல்சாமி தலைமையில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் பாதயாத்திரை செல்கின்றனர்.

வடக்குகிழக்குஊவாஆகிய3மாகாணங்களையும் யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு



திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை மொனராகல 7 மாவட்டங்களையும் இணைத்து 48 நாட்களில் 98 ஆலயங்களைத்தரிசித்து 815 கிலோ மீற்றர் தூரத்தை நடந்துகடக்கும் இப் புனித பாதயாத்திரை இலங்கையின் மிகமிக நீண்ட தூர கதிர்காம பாத யாத்திரையாக கருதப்படுகின்றது.

கடந்த 23 வருடங்களாகச் சைவமரபு பாரம்பரியத்துடன்இடம்பெற்றுவரும்இப்பாதயாத்திரை கதிர்காமக்கந்தனாலய கொடியேற்றத்தினத்தில் கதிர்காமத்தைச் சென்றடைவது வழமையாகும்.

நேற்று சந்நதியில் அதிகாலை நடைபெற்ற விசேட பூஜையினைத் தொடர்ந்து மோகன் சுவாமியால் வேலாயுதமானது கதிர்காம பாதயாத்திரைக் குழுத்தலைவர் ஜெயாவேல்சாமியிடம் சம்பிரதாய பூர்வமாக ஒப்படைக்கப்பட்டு பாதயாத்திரை ஆரம்பித்தது .

வற்றாப்பளைகண்ணகைஅம்மனாலயத்தை அடைந்து பின்னர் அங்கிருந்து ஜெயாவேல்சாமி அணியில் வழமையாக பயணிக்கும் நூறு பக்தர்களுடன் மீண்டும் பாதயாத்திரை இடம்பெறும்.

இதேவேளை கதிர்காம ஆடிவேல்விழா உற்சவத்திற்கான கன்னிக்கால் அல்லது பந்தல் கால்நடும்வைபவம்மே26நடைபெறவிருக்கிறது.

எனவே ஜூன் 5 கொடியேற்றம் இடம்பெற்று ஜூலை21எசலபெரஹறாவுடனானதீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது.

# தீ விபத்தில் வீடு சேதம்

(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தின் நிலாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இல. 38இல் உள்ள, பெரியகுளம் -விருகம்மான வீட்டுத் தொகுதியில் வீடொன்றே தீப்பற்றியதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

இந்தச்சம்பவம்வெள்ளிக்கிழமை அதிகாலை 12 .30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

அன்றைய தினம் வீட்டை பூட்டி விட்டு திருகோணமலை கடற்படைக்கு முன்னால் தனது கடையில் தங்கியிருந்தபோது சம்பவம் இடம் பெற்றதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தார். தான் தூங்கிக் கொண்டிருக்கும்போது தனது வீடு தீப்பற்றி எரிவதாகயாரோதகவல்சொன்னார்கள் என்றும் உடனடியாக பொலிஸ் அவசரப் பிரிவு இலக்கமான 119க்கும் தீயணைப்புப்படையினருக்கும்தான் அறிவித்தார் என்றும் எனினும் தீயை அணைப்பதற்கு இடையில் வீட்டில் இருந்தபலபெறுமதியானவீட்டுஉபகரணங்கள் எறிந்து நாசமாகி விட்டன என்றும் இதனால் தனக்குப் பல இலட்சம்ரூபாய்நட்டம்ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தவிபத்தில்நல்லவேளையாக உயிர்ச் சேதம் எதுவும் இடம் பெறவில்லை. தீ விபத்துக்கான காரணம் இது வரைக்கும் வெளியாகவில்லை.

இச்சம்பவம்தொடர்பில்நிலாவெளி பொலிஸில்முறைப்பாடுசெய்துள்ளதாக உரிமையாளர் மேலும்தெரிவித்தார்.

# வீடு தேடிச்சென்று கௌரவம்

(சலீம்)

அரசசேவைஓய்வூதியர்நம்பிக்கை நிதிய நிந்தவூர்க்கிளையினர் தமது உறுப்பினர்களான நான்கு அரச ஓய்வூதியர்களை அவர்களது வீடு தேடிச்சென்று கௌரவித்துள்ளனர்.

நிதிய நிந்தவூர்க் கிளையின் 21ஆவதுவருடாந்தப்பொதுக்கூட்டத்தின் ஓர்அங்கமாக இந்தகௌரவிப்புநிகழ்வு இடம்பெற்றது.

தற்சமயம் நடமாடமுடியாத நிலையிலிருக்கும், நிதியத்தின் நீண்டகால உறுப்பினர்களாகவும், தலைவர்களாகவும் சேவையாற்றிய மேற்படி நால்வருக்குமே கௌரவம் அளிக்கப்பட்டது.

இதன்படி ஓய்வு நிலை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும், நிந்தவூர் நலன்புரிச்சங்கத் தலைவருமான எம்.எச்.யாகூப்ஹஸன், ஓய்வு நிலைநீதிமன்றமுதலியார்ஏ.எஸ்.இப்றாகீம், ஓய்வு நிலைவிரி வுரையாளர் ஏ.எல்.எம்.பஸீர், ஓய்வு நிலை அதிபர் கலாபூசணம்,ஹாஜியானிஎம்.செயினுலாப்தீன் ஆகிய நால்வருமேவீடுதேடிச் சென்று கௌரவிக்கப்பட்டனர்.

அரசசேவைஓய்வூதியர்நம்பிக்கை நிதிய நிந்தவூர்ப்பிரதேசக்கிளை சார்பில் தலைவர் ஏ.எல்.மஹ்றூப், செயலாளர் எம்.ஏ.அப்துல் அஸீஸ், உபதலைவர் எஸ்.அகமது உட்பட கிளை முக்கியஸ்த்தர்கள்மேற்படிநால்வரதும் வீடுகளுக்குச் சென்று அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தியும், பரிசுப் பொருட்கள் வழங்கியும் கௌரவம் அளித்தமை குறிப்பிடத்தக்கது.

# எழுத்தாளர் கே. கணேஷ் நூற்றாண்டு சிறப்பு மலர்



இலங்கையின் மூத்த படைப்பிலக்கியவாதியும், மொழிபெயர்ப்பாளரும், பாரதி இலக்கிய இதழை முன்னர் வெளியிட்டவருமானதலாத்துஓயாகே. கணேஷ் (1920 - 2004 ) அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, அவரின் புதல்வி ஜெயந்தி சங்கர் சிறப்பு மலர் ஒன்றை வெளியிடவிருக்கிறார்.

எழுத்தாளர் கே. கணேஷுடன் இலக்கிய நட்புறவிலிருந்த எழுத்தாளர்களிடமிருந்தும் அவரின் வாழ்வையும் பணிகளையும் பற்றி அறிந்தவர்களிடமிருந்தும்ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

அன்னாரின் படைப்புகள் குறித்தும் இம்மலருக்கு எழுதலாம். நூற்றாண்டு மலருக்கு ஆக்கங்கள் அனுப்பவிரும்பும் அன்பர்கள் பின்வரும் மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளலாம். jayanthireap@yahoo.com

# போதைப்பொருள் வழக்கில் மூவருக்கு விளக்கமறியல்

ஐஸ்போதைப்பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் வவுனியா பொலிசாரால் கைது செய்யப்பட்ட மூவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதிமன்றம்உத்தரவுபிறப்பித்துள்ளதாக பொலிசார் வெள்ளிக்கிழமை தெரிவித்தனர்.

வவுனியா பொலிஸ் நிலைய போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு பொலிஸ் பரிசோதகர் எச்எம்.ரிஸ்வி தலைமையிலான பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து சந்தேகநபர்கள் மூவரும் ஏப்ரல் 28 செட்டிகுளத்தில் வசிக்கும் 35 வயது இளைஞர் ஒருவரை 17 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஐஸ் போதைப் பொருளுடன் வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

நீதிமன்ற அனுமதி பெற்று குறித்த இளைஞர் பொலிசாரால் தொடர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் உக்குளாங்குளம், மில் வீதி பகுதியில் வைத்து செட்டிகுளத்தில் வசிக்கும் 36 வயதுடைய இளைஞரும் 12 இலட்சம்பெறுமதியான ஐஸ்போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

இவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் குறித்த இருவருக்கும் ஐஸ் போதைப் பொருளைவிநியோகித்ததாகவவுனியா நகரப் பகுதியில் வியாபார நிலையம் ஒன்றை நடத்தி வரும் மதகுவைத்த குளத்தைச்சேர்ந்த28வயதுஇளைஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டதுடன், அவருடைய வீட்டில் இருந்து ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

மூவரையும்வவுனியாநீதிமன்றில் முற்படுத்திய நிலையில் அவர்களை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

(100 )




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.05.2024இல் வெளியிடப்பெற்றது